
பொய்யாமொழி
பி.எஸ்.ஜி.ஜி. கோவிந்தசாமி
புதுமலர் நிலையம்

# பொய்யா மொழி

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

ஆசிரியர் :

பி. எஸ். ஜி. ஜி. கோவிந்தசாமி

## புதுமலர் நிலையம்

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

முதற் பதிப்பு டிசம்பர் '54
உரிமை ஆசிரியருக்கே:

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1715
எண்: 1715

## பொருளடக்கம்

பக்கம்

பொருளும் இரத்தலும் 9
பொருள் ஈட்டுவதெப்படி? 15
வள்ளுவர் வகுத்த அறம் 23
இல்வாழ்க்கை 37
வள்ளுவரின் அரசியல் 49
இறைவழிபாடு 57
வெகுளாமை 68
சான்றாண்மை 77
வள்ளுவர்தம் ஊழ்க்கொள்கை 87
பொய்யா மொழி 93

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

விலை ரூ. 1—8—0

# கருத்துரை

உண்மையே அழகு, அழகே உண்மை என்றார் ஆங்கிலக் கவிஞர் ஒருவர். உண்மையே உயிர், அழகே அதன் வடிவம் எனலாம். தெளிந்த உண்மை தேர்ந்த அழகாக வடிவு பெற்று அமையின், அதுவே உயர்ந்த நூல் ஆகும்.

திருவள்ளுவர் வாழ்க்கையை நன்கு ஆராய்ந்து உண்மைகளைத் தீரத் தெளிந்தவர். வாழ்க்கையை அவர் ஆராய்ந்த போது பல நூல்கள் கொண்டும் ஆராய்ந்தார்; நேரே மக்கள் வாழ்க்கையைக் கண்டும் ஆராய்ந்தார். 'நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை,' 'யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை' என்பன முதலாய பொய்யா மொழிகள் சான்றாக உள்ளன. இவ்வாறு உயர்ந்த சான்றோர் ஒருவர் தெளிந்த உண்மைகளைத் தமிழில் எழுதிவைத்தது நம்முடைய பேறு ஆகும். நம் தாய் மொழியில் திருக்குறள் அமைந்திருப்பதால்தான், தமிழராகிய நாம் இந்த நூலை அறிவால் அறிதலோடு, உள்ளத்தாலும் உணர்ந்து உறவு கொள்ள முடிகின்றது.

திருவாளர் கெ. கோவிந்தசாமி அவர்கள் திருக்குறளை இவ்வாறு அறிந்தும் உணர்ந்தும் உறவு

கொண்டுள்ளவர். இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ள கட்டுரைகள் அதன் பயனாக விளைந்தவை; இவை முன்னர் 'வசந்த' மலரில் மணம் கமழ்ந்தவை.

பொருளும் இரத்தலும், பொருள் ஈட்டுவது எப்படி, வள்ளுவர் வகுத்த அறம், வள்ளுவரின் அரசியல் முதலாய பல தலைப்புக்களை அமைத்துக் குறள்மணிகளை ஆங்காங்கே பொருந்த எடுத்துக் காட்டி விளக்கம் தந்துள்ளார். கட்டுரைகளை அழகிய எளிய நடையில் அமைத்துள்ளார்; தம் வாழ்க்கையனுபவத்தையும் கலந்து சுவையூட்டியுள்ளார்.; பலரும் பயன் பெறுதல் வேண்டும் என்ற வேட்கையுடன் கருத்துக்களைத் தெளிவுபடுத்தியுள்ளார். ஆசிரியரின் நன் முயற்சி வெல்வதாக.

டாக்டர் மு. வரதராசன்,
எம்.ஏ.எம்.ஓ.எல்.பி.எச்.டி.,
(தமிழ்த் துறைத் தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை)

# முன்னுரை

'வசந்தம்' ஆசிரியர் திரு ஆர். திருஞானசம்பந்தம் அவர்களின் வேண்டுகோளின்படி சென்ற ஓராண்டாக "வசந்தம்" இதழில் திருக்குறளைப் பற்றிய என் கருத்துக்களைக் கட்டுரைகளாக எழுதி வந்தேன். எனது கருத்துக்கள் பல அறிஞர்களைக் கவர்ந்தன போலும். அவர்கள் கடிதங்கள் வாயிலாகத் தங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்து என்னை மேலும் மேலும் ஊக்குவித்தனர். அவர்களுக்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன்? நன்றி என்று ஒரு முறைக்குப் பத்து முறை கூறி அமைகின்றேன். அக்கட்டுரைகளின் தொகுதியே "பொய்யா மொழி" என்ற இந்நூலாக வெளிவருகிறது. இவற்றில் சில திருச்சி ரேடியோ நிலையத்தினின்றும் ஒலி பரப்பப் பட்டது. அவைகளையும் பிரசுரிக்க அனுமதிதந்த நிலைய நிர்வாகஸ்தருக்கு என் நன்றி. திருக்குறளுக்கு உள்ள பல பெயர்களில் "பொய்யா மொழி" என்பதும் ஒன்று. "பொய்யா மொழி" எனப் பெயர் சூட்டியதன் காரணத்தை ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளேன். திருக்குறளைப் பற்றிய என் கருத்துக்கள் முடிவானவை என்றோ, சிறந்தன என்றோ கூற இயலாது. திருக்குறள் எவராலும் முடிவு காணப்பெறாத பொருளுடையதாகும். என் சிறுமதியில் எனக்குப் பட்டவற்றை எழுதியுள்ளேன். பிழை காணின் அறிஞர் பொறுத்தருள்வாராக. இச்சிறு நூலுக்குச் சிறந்ததொரு கருத்துரை எழுதி உதவியவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் உயர்திரு டாக்டர் மு. வரதராசனார் எம்.ஏ.எம்.ஓ.எல்.பி.எச்.டி., அவர்களாவர். அவர் என்பால் வைத்த அன்பின் மிகுதியினால் இத்தகைய சிறந்த கருத்துரை அளித்துள்ளார். அவருக்கு எனது உள்ளார்ந்த நன்றி உரித்தாகுக.

இச்சிறு நூல் வெளிவருதற்குப் பேருதவியாகவும், யான் தொடர்ந்து கட்டுரைகள் எழுதத் தூண்டுகோலாக இருந்தவருமாகிய நண்பர் ஆர். திருஞானசம்பந்தம் அவர்கட்கும், பிழைகளைத் திருத்தி உதவிய ஸ்ரீரங்கம்மாள் உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் திரு க. பெரியசாமி அவர்கட்கும் பெருநன்றி. இத் துறையில் எனக்குத் தூண்டு கோலாகவிருந்து, ஆசிநல்கிய எனது முன்னாள் ஆசிரியரும், கோவை ஆர் கே. ஸ்ரீரங்கம்மாள் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியருமான உயர்திரு. சு துரைசாமி நாயுடு, எம் ஏ., எல்.டி., அவர்கட்கும் எனது நன்றி உரித்தாகுக. நன்முறையில் அச்சிட்ட புதுமலர் அச்சகத்தாருக்கும் நன்றி.

பி. எஸ். ஜி. ஜி. கோவிந்தசாமி

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

# பொருளும் இரத்தலும்

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றின் திறனையும் நன்கு உணர்ந்தவர் வள்ளுவர். ஒருவனது வாழ்வு அறம், பொருள், இன்பம் மூன்றும் சேர்ந்ததே. பொருள் ஏனைய இரண்டிற்கும் துணை நிற்பது. பொருள் இன்றேல் அறம், இன்பம் ஆகிய இரண்டினையும் நுகரவியலாது. "பொருள், செல்வம்" என்ற இரு சொற்களையும் வள்ளுவனார் பல அதிகாரங்களில் அமைத்துள்ளார். சான்றாக "கல்வி" என்ற அதிகாரத்தில், "கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை" என்றார். அங்கு கல்வியே சிறந்த செல்வம் என்கின்றார்.

"மக்கட்பேறு" என்ற அதிகாரத்தில், "தம்பொருளென்பதம் மக்கள் அவர் பொருள் தந்தம் வினையான் வரும்" என்கிறார். ஒருவற்குச் சொத்து என்று கூறப்படுவது, தம் மக்கள் தாம். மற்றவையெல்லாம் அவரவர் செய்கின்ற தொழில்களால் கிட்டும் என்பது கருத்து. செவிச் செல்வத்தைப் பற்றிக் கூறுமிடத்து, "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை" என்றார். "அருளுடைமை" பற்றிக் கூறும் பொழுது "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம் பூரியார்கண்ணுமுள" என்றார். ஆகமனிதனாகப் பிறந்தால், கல்வி, கேள்வி, மக்கள், அருள்,

பொருள் ஆகிய எல்லாச் செல்வங்களும் பெற்றிருத்தல் வேண்டும் என்பது வள்ளுவரது முடிவு. கல்வி, கேள்வி, அருள், பொருள் ஆகியவை பெற்று மக்கள் இல்லாதிருத்தலும், மக்கட் செல்வம் பெற்று ஏனையவை இல்லாதிருத்தலும், கல்வி, கேள்வி, பொருள், மக்கள் இவை பெற்று அருளிலாதிருத்தலும், கல்வி, கேள்வி, மக்கள், அருள் ஆகியன இருந்து பொருளில்லாதிருத்தலும் பொருந்தா. எனவே பொருள் என்றால் மேற்கூறிய அனைத்தும் சேர்ந்ததே ஆகும்.

பொருட்பாலில், நாடு, அரண் என்ற இரு அதிகாரங்களை அடுத்துப் "பொருள் செயல் வகை" என்ற அதிகாரத்தை வைத்துள்ளார். வள்ளுவர். ஒரு நாட்டிற்கு அரண் எத்துணை இன்றியமையாததோ, அதே போன்று மக்களும் செல்வமுடையவராய் இருத்தல் வேண்டும்.

பொருளைத் தேடுகின்ற நாடு தான் செழித்தோங்க முடியும். பொருள் தேட வேண்டுமாயின் தொழில் வளம் பெருக வேண்டும். சான்றாக, இன்று அமெரிக்காவும், ரஷ்யாவும் புகழ் பெற்ற நாடுகளாய் விளங்குகின்றன வென்றால், அதற்குக் காரணம் அங்கு மக்கள் தொகை குறைவு என்பதொன்றே மட்டும் அன்று; மக்கள் தம் முயற்சியால் பொருளீட்டி நாட்டிற்கு இடுக்கண் நேருங்கால் உதவ இயலுகின்றது. "பொறையொருங்கு மேல் வருங்கால் தாங்கி இறைவற்கு இறையொருங்கு நேர்வ நாடு" என்பது வள்ளுவர் வாக்கு. அஃதாவது, பிற நாட்டினர் விரும்பி வந்து கூடிய காலை, அவர்களது சுமையைத் தாங்க வல்லதாய்த், தன்னரசுக்குரிய வரிகளையும் கொடுக்கும் நாடே சிறந்ததென்க. ஒரு நாடு,

பொருளீட்டும் துறையில் சிறந்திருந்தாலொழிய, பிற நாட்டாரைக் காப்பதற்கும், தம் அரசிற்குரியவைகள் செலுத்துவதற்கும் எங்ஙனம் இயலும்? தன்நிறைவைச் சரி செய்யும் நாடே சிறந்த நாடு என்று வள்ளுவர் கூறுகின்ருர். தன் தேவைகளுக்காக பிற நாடுகளிடம் கடன் வாங்குதல் சால்புடைத்தன்று. அவ்வாறு கடன் வாங்கிஞல், வாங்கும் நாடு, கொடுக்கும் நாட்டிற்கு உடன் பட்டதாகி விடும். எனவே ஒரு நாட்டின் வரலாற்றில், பொருளாதாரம் முதலிடம் பெறும்.

தனி மனிதனின் வாழ்வில், அக்காலத்தில் "தென் புலத்தார், தெய்வம், விருந்தொக்கல் தானென்ருங்கு ஐம் புலத்தாருேம்பல் தலை" என்றவாறு, ஒருவன் தன் வருவாயை, ஐந்து கூருக்கி, அறிவிற் சிறந்த புலவருக்கும், இறைவன் பணிக்கும், உதவி நாடி வந்தோருக்கும், சுற்றத்தாருக்கும், தன் செலவுகளுக்கும் எடுத்துக் கொண்டது போக, மிகுந்திருக்குமாஞல் அரசுக்கு அளிக்கப் பட வேண்டும் என்ற விதி இருந்தது. எனவே எவரும் சோம்பி இருத்தலாகாது; ஒவ்வொருவரும் தம் செலவுக் கேற்ற வருவாய் தேட முயல வேண்டும் என்ற கருத்துப் புலஞகின்றது. இரந்து பிழைத்தலே வன்மையாகக் கண்டிக்கிருர் வள்ளுவர். இரவு, இரவச்சம் என்ற இரு அதிகாரங்களும் அதனை நன்கு விளக்கும். இரவு என்ற அதிகாரத்தில், "இன்பம் ஒருவற்கிரத்தல் இரந்தவை துன்ப முருவரின்" என்கின்ருர். அஃதாவது, கேட்டவை கொடுப்பாரிடமிருந்து துன்பமில்லாமல் வருமாயின், இரத்தல் இன்பமே என்பது பொருள். இதஞல் இரப்பார்க்கு ஈவார் மிகச் சிலரே என்பதும், அவ்வாறு ஈவாரும் கடுமொழி கூருமல் ஈயாரென்பதும், அக்கடு

மொழி கேட்டு இரப்பதினும், இறப்பதே நன்றென்பதும் பெறப்பட்டன.

இரவச்சத்தில் " இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான் " என்கிறார். அஃதாவது, பிச்சை எடுத்து உயிர்வாழுகின்ற மக்களைப் பெற்றுள்ள அரசன் அம்மக்களைப் போலவே எங்கும் அலைந்து கெடுக என்பது பொருள். " உலகியற்றியான் " என்ற சொல் கடவுளைக் குறிக்காது; அரசனையே குறிக்கும். அதற்கு ஆதாரமாக " இறைமாட்சி " என்ற அதிகாரத்தில் " இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லதரசு " என்ற குறளை உன்னுக. பொருள் வரும் வகைகளை உண்டாக்குவதும், பொருளைச் சேர்த்தலும், சேர்த்ததைக் காத்தலும், அவற்றைச் செலவு செய்யப் பகுத்தலும் அரசே என்கின்றார். எனவே ஈண்டு உலகியற்றியான் என்ற சொல் உலகிலுள்ள சட்டங்களை இயற்றியவனாகிய அரசன் என்றே பொருள்படும். அஃதெவ்வாறெனின், மேல் நாடுகளில் பிச்சை எடுத்தலைத் தடுக்கும் சட்டங்கள் உள்ளன. அங்கு உடல் வலிமை உள்ளவர்கள் பிச்சை ஏற்றால் கடுந் தண்டனைக் குள்ளா வார்கள். வள்ளுவனாரும், " இன்மை இடும்பை இரந்து தீர்வாமென்னும் வன்மையின் வன்பாட்டதில் " என்றார் வறுமைத் துன்பத்தைத் தன் முயற்சியால் தீர்க்க முய லாது பிச்சை எடுத்துத் தீர்ப்போம் என்று நினைப்பது வலிமையான உடலைப் பெற்றிருப்பதற்கு முரணான தாகும்.

வலிமையுடையோர் தாங்களாகவே உழைத்துத் தங்களுக்கேற்ற வருவாய் தேட வேண்டுமேயன்றி ஏற்

பது கூடாது. வலிமை மிக்கவர் ஏற்றாலும் ஈவார் இல்லை என்றவாறு. மேல் நாடுகளில், கண்ணிழந்தோர், கை கால் இழந்தோர் ஆகியோரைத் தெருக்களில் ஏற்க விடுவதில்லை. அவர்களுக்கு அரசினரே விடுதிகள் கட்டி, உகந்த வேலைகள் கொடுத்து வருவாய் தேடுகிறார்கள். தமிழ் நாட்டிலும், ஏற்போருக்கெனத் தனி இடம் இருந்ததாகத் திருவள்ளுவருக்குப்பின் வந்த நூலாகிய 'மணிமேகலை' கூறும். ஊரின் ஒதுக்குப்புறத்திலே ஒரு சுடு காடு. அதற்குச் சக்ரவாளக்கோட்டம் என்று பெயர். அதனுள் உலகவறவி என்றோர் இடம் உண்டு. அங்கு "ஊரூராங் கண் உறுபசி உழந்தோர், ஆருமின்மையின் அரும்பிணியுற்றோர்" ஆகியோர், 'யாரார் நமக்குணவிடுவார்கள்' என்று காத்திருப்பர். அறம் செய்வோர், அங்குச் சென்று செய்வர். இக்காலத்திலும் இத்தகைய விடுதிகள் ஏற்படின் எவ்வளவு நன்மை பயக்கும்? ஆக பிச்சை ஏற்றலைத் தடுப்பது அரசனேயன்றிக் கடவுள் அற்றன்று.

ஒரு நாடு முன்னேற வேண்டுமாயின், அதன் மக்கள் சோம்பித்திரியலாகாது. தனி மனிதன், தன்னைச் சார்ந்தோரையும், தன்னையும் காத்துக் கொள்ளுதற்கு ஏதேனுமொரு தொழிலை மேற்கொள்ள வேண்டும்.

தனது செலவுக்கேற்ற பொருளைக்கூட இயற்ற இயலாத மனிதனை எவரும் மதிக்க மாட்டார். கல்வி, கேள்வி, அருள் ஆகிய எல்லாச் செல்வங்களும் எவ்வாறு இன்றியமையாததோ, அவ்வாறே பொருள் தேடலும் இன்றியமையாதது என்ற கருத்துக் கொண்டே "பொருள் செயல் வகை" என்றோர் அதிகாரம் கூறினர் திருவள்ளுவர்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

ஒரு பொருட்டாக மதிக்கப் பெறாதவனாயினும், இவன் பொருள் ஈட்டுகின்ற தன்மையில் உள்ளவனாயின் அவனை எல்லோரும் போற்றுவர் என்பது அதன் கருத்து. ஒழுக்கத்தானும், கல்வியானும், மற்ற செயல்களானும் உயர்ந்தவனாய் இருந்து, பொருளீட்டத்தில் தாழ்ந்தவனாய் இருப்பின் பயனில்லை. திருவள்ளுவர் கொள்கைப்படி, பொருளீட்டுதல் வேண்டும். ஈட்டும் பொருளை அவர் கூறுகின்ற வகைகளில் செலவிடல் வேண்டும்.

# பொருள் ஈட்டுவதெப்படி?

சென்ற கட்டுரையில் பொருளீட்டுவதன் இன்றியமையாமை விளக்கப்பெற்றது. பொருளீட்டும் வல்லமை உள்ளவனே மனிதன். தன் செலவுக்கேற்ற வருவாய் தேடும் பெற்றிமை ஒவ்வொருவருக்கும் வேண்டும் என்று கூறப்பட்டது. இனி, பொருளால் விளையும் நன்மைகளையும், ஈட்டும் வகைகளையும் காண்போம். தன் செலவுக்கேற்ற பொருள் தேடி, செலவுகளைக் கழித்துச் சிறிது மீத்துவைப்போனை எல்லோரும் போற்றுவர். தனது வருவாய்க்கே திண்டாடுபவனைத் தூற்றுவர். தன் வருவாயால் செலவுக்கேற்ற பொருள் தேடாதவன் எதற்கும் தகுதியற்றவன். அவன் இரந்தாலும் ஈவார் இல்லை. மீத்துவைத்து பிறருக்கும் உதவும் தன்மை வாய்ந்தவர்களை அனைவரும் போற்றுவர். அவனால் பலரும் பயனெய்துவர். அவனது புகழ் எங்கும் பரவும்.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு

என்றார் திருவள்ளுவர்.

அத்தகு பொருளீட்டுவது எப்படி? பொருளீட்டுவதற்கு விடாமுயற்சி வேண்டும். சோம்பல் தன்மை முற்றிலும் கூடாது. முயற்சியால் கிட்டாததொன்று

மில்லை. ஒரு பேடி கையில் வாள் இருப்பின் எவ்வாறு பயன் படாதோ, அவ்வாறே முயற்சியற்றவன் தொழிலி லும் முன்னேற மாட்டான்.

> தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்.

என்ற குறளுக்குப் பரிமேலழகர் "முயன்ற வினைபால் வகையால் கருதிய பயனைத் தாராதாயினும், முயற்சி யானது தன் இடமாகிய உடம்பு வருந்திய வருத்தத்தி னளவு கூலி தரும். பாழாகாது" என்று உரை கூறுகின் றார். பரிமேலழகரே "ஊழ்" என்ற அதிகாரத்திற்கு உரை எழுதுங்கால் "தெய்வம்" என்ற சொற்கு "தெய்வம், ஊழ், பால், முறை, உண்மை, நியதி, இயற்கை என்பன ஒரு பொருட்கிளவி" எனக் கூறு கின்றார். நாம் "தெய்வம்" என்பதற்கு "இயற்கை" என்றே பொருள் கொள்ளலாம். இயற்கை நம் முயற் சிக்குப் பலனளிக்கவில்லை எனினும், மேலும், மேலும் முயலலாம். வெற்றி கிட்டும். எதையும் "கடவுள் செயல்" என எண்ணல் தவறு.

பொருளீட்டும் துறையில் இறங்குபவன், தனக்கேற் படும் துன்பங்களைப் பொருட்படுத்தலாகாது. அவ்வாறு அவன் பொருட்படுத்துவானாயின், அவனது சுற்றத்தார் அவதியுறுவர். ஆதலின், அவனுக்கேற்படும் துன்பங்களை இன்பமாகக் கருதுபவன், தனது சுற்றத்தாரைக் காப் பவனாவான் என்ற பொருளில்,

> இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
> துன்பம் துடைத்தூன்றும் தூண்

என்றார் பொய்யாமொழியார். சோம்பல் தன்மை செல்வம் மிக்குடையாரையும் வறிஞராக்கி விடும். சோம்பல் உடையார் தம் பொருளைக் காப்பாற்றும் தன்மை இழப்பர். குடும்பத்தைக் காத்தற்குரிய பொருளீட்ட இயலாமற் போமாயின் அதற்குக் காரணம் சோம்பலே. ஒருவன் சோம்பலை ஒழிப்பானாயின், அவனது குடும்பத்தின் தொல்லை ஒழியும்.

குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்

என்பது குறள்.

செல்வம் ஈட்டுதற்கு இயற்கை சில நேரங்களில் நன்மை செய்யும், சில நேரங்களில் தீமை பயக்கும். நல்ல வழி என எண்ணி நாம் புகும் வழிகள் தீமை தரும். தீமை என நாம் விலக்கிய வழிகள் நன்மையாகும். எனவே ஒரு வினைமேற் கொள்ளுவான், நன்மை, தீமை இரண்டினையும் சீர் தூக்கிச் செயலாற்றல் வேண்டும்.

நல்லவை யெல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

என்றார் வள்ளுவர். பொருளீட்டும் தன்மை வாய்ந்தவன், எந்நாட்டிற்குச் சென்றாலும் பிழைப்பான். எங்கு செல்லினும் அவனுக்கு வறுமையும், பசியும் இல்லை. இந்நாளில் மேல் நாடுகளுக்குச் செல்ல, அரசாங்க அனுமதி வேண்டுவோர், தம் உடைமைகளை எழுத்து வாயிலாக தெரிவித்தால் தான் செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள். அவ்வாறே மேல் நாடுகளில் போய் இறங்கியவுடன், நம்மிடமுள்ள பொருளைச் சோதனையிட்டு, அப்பொருள்

போதுமா, போதாதா என அறிந்தே அங்குத் தங்க அனுமதிக்கிறார்கள். அவ்வாறில்லையாயின் அங்கு நாம் இருக்கும் தோறும் வேலை செய்தே பிழைத்தல் வேண்டும். எனவே பொருளீட்டும் வழிவகைகளை அறிந்தோருக்கு, எஞ்ஞான்றும் எங்கும் துன்பமில்லை. அதனால் தான் வள்ளுவர், செல்வமாகிய அணையா விளக்கு, தன்னையுடையார் நினைத்த இடத்திற்குச் சென்று பகை என்னும் இருளைத் தொலைக்கும் என்கிறார்.

பொருளென்னும் பொய்யா விளக்கம்
இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று

என்பது அவர் வாக்கு.

பொருளீட்டுதற்கும் சில நெறிமுறைகள் உள்ளன. பிறரைத் துன்புறுத்தியோ, அச்சுறுத்தியோ பொருள் தேடுவது ஈனமாகும். கண்ணியமான வாழ்வு நடாத்தி பொருள் தேட வேண்டும். ஒருவர் பிறரது பொருளைக் கவரக் கருதி, மற்றவரது சோர்வை எதிர்பார்ப்பாராயின் அவரிடத்தே அருளின் பெருமையை உணர்ந்து, அதன் கண் நின்ற வழுவா தொழுகும் ஆர்வமுடைமை காணப்படாது.

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்

என்பது குறள். அருள் கருதி அன்புடையவராவர் உழவரேயாவர். அன்பு உடையராய் உழவர் இருத்தலாற்றான் உலகம் வாழுகின்றது. தன்னலம் கருதாத் தலைமையாளர் உழவரே. உழவுத் தொழிலைப் போன்று

அமைதியளிப்பது வேறெத் தொழிலும் இல்லை. நெற் கதிர்ச் செல்வமுடையார் பல அரசர் குடைக் கீழுள்ள நிலங்களைத் தம்மரசர் குடைக் கீழாகச் செய்வர். தமது கையினால் உழவுத் தொழில் செய்வோர் தான் உலகைக் காப்போர். உணவின்றேல் உயிர்கள் அழியும். அவ் வுணவை உண்டாக்குவோர் உழவரே, அவர்கள் ஏற்க மாட்டார்கள். ஏற்போர்க்கு ஈவார்கள். அதனாற்றான்

இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்

என்றார். எனவே உழவே சிறந்த தொழில். வாணிகமும் செய்யலாம். ஆனால் வாணிகத்திற்கு முதலீடு தேவை. வாணிகத்தில் நடுவு நிலைமை வேண்டும். வாணிகம் செய் வார் பிறரது பொருளையும் தம்முடையதாகக் கருதிப் பாதுகாத்தல் வேண்டும். அஃதாவது கொடுப்பதைக் குறைக்காமலும், கொள்வதை மிகையாகக் கொள்ளாம லும் இருத்தல் வேண்டும்.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்

என்பது தமிழ் மறை. எனவே, பொருளீட்டும் வகைகளை அறிந்து, எவர்க்கும் தீங்கெண்ணாது ஈட்டிய பொருள் அறத்தினையும், இன்பத்தினையும் நல்கும் என்றவாறு,

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

என்றார் வள்ளுவர்.

இதுகாறும் மக்களுக்குப் பொருள் வரும் வகைகளைக் கூறிய வள்ளுவர், இனி அரசுக்குரிய பொருள் வருவாயைக் கூறுகின்றார் ஒரு அரசன் குடிகளிடத்தே அன்புடையவனாய் இருத்தல் வேண்டும். காலத்தை நோக்கி எவ்வெவ்வாறு வரிகள் விதித்தல் வேண்டுமோ அவ்வாறு செய்தல் வேண்டும். மிகுதியான வரிகளால் மக்கள் மனத்தைப் புண்படுத்தலாகாது. மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரோடு கொடுக்கின்ற பொருளை அரசன் ஏற்றுக் கொள்ளலாகாது.

அருளொடும் அன்பொடும் வாராப்
பொருளாக்கம்
புல்லார் புரள விடல்

என்பது குறள்.

தற்பொழுதுள்ள மரணவரிச் சட்டத்தின்படி, ஒருவர் இயற்கை எய்தினால், அவரது உடைமைகளைக் கணக்கிட்டு, ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேல் அவ்வுடைமைகளின் மதிப்பு உயருமானால் வரி விதித்தல் வேண்டும். ஆனால் இச்சட்டத்தில் பொருளுடையார்க்கு மக்களில்லாவிடினும், வேறு முறைக்காரர்களுக்கு இறந்தவரின் சொத்து சேரும். திருவள்ளுவர் இந்த வரம்பைத் தாண்டி மேலே செல்லுகின்றார். அவரது கொள்கைப்படி, ஒருவரது உடைமைகளுக்கு அவர் இறந்தபின் காப்போர் இல்லையாயின், அது அரசினரின் உடைமையாகும். சுங்கப் பொருளும், பகைவர் தரும் கப்பம் முதலியனவும் அரசுக்கே உரியன.

உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்

அன்பு என்பது ஒரு தாய். அது அருள் என்ற குழவியை ஈனுகின்றது. அந்த அருளாகிய குழவியை பொருள் என்ற செவிலி வளர்க்கின்றாள். அஃதாவது ஒவ்வொருவருக்கும் அன்பு என்ற ஒன்றுண்டு. ஆனால் அருள் அனைவருக்கும் இராது. வெகு சிலருக்கே அருள் உரியது. அதிலும் பொருளுடையார் மாட்டே அருளு மிருக்கும் என்று கூறுவர் போல்,

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியா லுண்டு

என்றார்.

அரசு என்றால் அதனுட்பல சீர்திருத்தங்கள் செய்ய வேண்டி வரும். படையைப் பெருக்கல், கல்வி கற்பித்தல், மக்களைக் காத்தல் போன்றவைகளுக்குப் பெரும் பொருள் தேவை. பொருளாதார வலிமை மிக்க நாட்டை ஆளும் மன்னவனுக்கு எவ்வகை அச்சமும் இல்லை. அது ஒருவன் குன்றின் மேல் ஏறி நின்று கீழே நடைபெறும் யானைப் போரைக் காண்டலை ஒக்கும்.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை

என்றார்.

பொருளாதார வலிமை மிக்க நாடுகளைக் கண்டால், ஏனைப்பகை நாடுகள் அஞ்சும். என்னையெனின், அந் நாட்டினருக்குத் தங்களைக் காத்துக் கொள்வதற்கும், பிறரை அழிப்பதற்கும் உரிய பொருள் உண்டு. சான்றாக, இன்று அமெரிக்காவை நோக்குவோம். உலகி

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல வரிசை எண்: 1715
காமராசர் பல்க... அவ்வை

லேயே செல்வம் மிக்க நாடு அமெரிக்கா. அவர்களிடத்து ஏராளமான போர்க் கருவிகள் உண்டு. எனவே மற்ற நாடுகள் அஞ்சுகின்றன. ஆதலின் பகைவர்களின் செருக்கினை அடக்குதற்குப் பொருளியற்றல் வேண்டும்.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூறிய தில்

என்பது வள்ளுவர் வாய்மொழி.

நல்ல நெறியால் பெறுகின்ற செல்வம் ஒருவர்க்கே உரியதன்று. பொருளானது ஓரிடத்திலேயே குவியலாகாது. மக்களிடையே வட்டமிடல் வேண்டும். அதுதான் அறமும், இன்பமும் ஆகும். மிகுதியான பொருளை ஈட்டுவது ஒருவருக்காக அன்று, பலரும் அதனால் பயன் பெறல் வேண்டும். அறத்தால் விளைவதே இன்பம்.

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்
கொண்பொருள்
எனை இரண்டும் ஒருங்கு

என்றார் திருவள்ளுவனார். மக்கள் உழைப்பாளிகளாய் இருத்தல் வேண்டும். உழைப்பின் பயனை ஒருவரே பெறுமல், பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்தல் வேண்டும். அதுதான் அறமும், இன்பமும் என்று கூறி, ஒருவகைப் பொதுவுடைமைக்கு அடிகோலுகின்றார் வள்ளுவர்.

# வள்ளுவர் வகுத்த அறம்

"பொதுவுடைமை" என்ற சொல்லைக் கண்டு எவரும் அஞ்ச வேண்டியதில்லை. மனிதனது வாழ்விலேயே பொதுவுடைமைத் தத்துவம் அடங்கியுள்ளது. பிறந்தவுடனேயே குழந்தை பலராலும் சீராட்டி வளர்க்கப்படுகின்றது. வளர்ந்து கல்வி கற்கும் பருவத்தில் பள்ளிக்குச் சென்றால் பலருக்கு நண்பனாகி பல வகைகளில் பயன்படுகின்றான். பிறகு மணமாகி மனைவிக்கும், மக்களுக்கும், மற்றோருக்கும் பணியாற்றுகின்றான். இவ்வாறு பிறந்தது முதல் இறக்கும் வரை மக்கள் கூட்டமைப்பிலேயே வாழ்க்கை நடாத்த வேண்டியுள்ளது. அதே போன்று தான் பொருளாதாரத் துறையிலும், ஈட்டப்பெறும் பொருளானது ஒருவரிடமே தேங்கி நில்லாது, மக்கள் கூட்டமைப்பிற்குச் சேர வேண்டும் என்று கூறப்படுவதுதான் பொதுவுடைமை. இக்கொள்கை நமது நாட்டிற்கு வேற்று நாட்டினின்றும் இறக்குமதியானதல்ல. நமது ஆன்றோர் இதனை "அறம்" என்ற பெயரால் வழங்கி வந்தனர். "அறம்" என்பது ஒருவரது பொருள் களவு போகாமலிருக்கச் செய்யப்பட்ட காப்பாகும். மக்களுக்கு அதில் நம்பிக்கையூட்டுவான் வேண்டி மேலுலகம், கீழுலகமென்பனவற்றையெல்லாம் கற்பனை செய்து எழுதி வைத்தனர். நாளடைவில் மக்களுக்கு

அவற்றிலெல்லாம் நம்பிக்கை குன்றவே அறம் அருகிற்று. சிலரால் ஈட்டப்பெறும் பொருளெல்லாம் மக்கள் கூட்டமைப்புக்குச் சேராமல் ஒரே இடத்தில் தேங்கி நின்றது. இவ்வாறு தேக்கப்பெற்ற பொருளை மீண்டும் அனைவருக்கும் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத் தோன்றியதே இன்றைய "பொதுவுடைமை" என்னும் வன்முறைக் கொள்கை. இவ்வன்முறைக் கொள்கையை மென்முறையாக்குதற்குத் தான் விநோபாபாவே அடிகளார் தற்பொழுது முயலு கின்றனர். நிலக்கொடை இயக்கம் ஒருவாறு வெற்றி யளித்தது. அடுத்துப் பணக்கொடை இயக்கம் தொடங்குவதாகச் சொல்லுகின்றார். அது சரி அல்லது தவறு என்ற வாதத்தில் தற்பொழுது இறங்க நான் சித்த மாக இல்லை.

இதே போன்ற ஒரு கொள்கை தான் திருவள்ளுவ ருக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது.

திருக்குறளில் அறன் வலியுறுத்தல், ஈகை, நன்றியில் செல்வம், ஒப்புரவறிதல் என்ற நான்கு அதிகாரங்களி லும் இதே "பொதுவுடைமை"த் தத்துவத்தைத் தான் ஓயாது வற்புறுத்துகின்றார். உலகில் பிறந்தார் அனைவரும் ஒரே வகைத் தொழிலைச் செய்து பொருள் ஈட்டல் எலாது அவ்வவர் தம் உடல் அமைப்புக்கும், அறிவுத் திறனுக்கும் ஏற்றவாறு தான் தொழில் செய்ய இயலும். அறிவும், உடல் வலிமையும் வாய்ந்தோர் பெரும் பொருள் ஈட்டக்கூடும். அறிவிற் சிறந்தாராய் உடல் வலிமை குறைந்தோராய் உள்ளவர்கள் முன்னவரைக் காட்டிலும் குறைந்த ஊதியமே பெறுவார். அறிவற்று

வெறும் மூட்டுத் தொழில் செய்வோர் அதனினும் சிறு அளவே ஊதியம் பெற இயலும். ஆனால் இவர்களனை வரையும் மக்கள் கூட்டமைப்பில் காணும் போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் சிறந்தோராய்க் காணப்பெறுவர். ஆதலின் அனைவரின் உழைப்பாலும் சேர்ந்த பணமானது இணை உரிமையாக்கப்படல் வேண்டும். அஃதெங்ஙனம்? அதுதான் இங்கு விளக்கப் பட வேண்டிய பொருள்.

"அறன் வலியுறுத்தல்" என்ற அதிகாரம் "நீத்தார் பெருமை" என்ற அதிகாரத்தின் பின்னர் வைக்கப் பெற்றது. நீத்தார் யார் என்பதும், அவர் பெருமை பற்றியும் பின்னர் ஒருக்கால் எழுதுவேன். "அறன் வலியுறுத்தல்" என்ற அதிகாரத்தில் பரிமேலழகர், "அஃதாவது அம்முனிவரால் உணர்த்தப்பட்ட அம்மூன்ற னுள் ஏனைப் பொருளும், இன்பமும் போலாது அறன், இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றனையும் பயத்த லான், அவற்றின் வலியுடைத்தென்பது கூறுதல்" என்கின்றார். பரிமேலழகர் தம் உரையினை மறுத்தற்கு எளியேன் ஏற்றவனல்லன். எனினும் யான் எழுதுவன வற்றை கற்றோர் கொள்ளினும் கொள்க. விடுப்பினும் விடுக்க. இம்மை என்பது இப்பிறப்பு. மறுமை என்பது மறு பிறப்பு. மனிதனுக்குப் பல பிறப்புகள் உண்டென்ப ஒரு சாரார் கொள்கை. ஒரே பிறப்புத்தான் உண்டென் பது மற்றோர் சாரார் கொள்கை. மஹா மஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யரவர்கள் பிறப்பு என்ப தைப் பற்றித் தமது "பெருங்கதைப்" பதிப்பில், ஆசிரியர் வரலாற்றில் பின்வருமாறு எழுதுகின்றார்:

"மூன்று பிறப்புற்ற கொள்கை என்பதைக் குறித்து நன்ருக அறிந்து எழுத முடியவில்லை; ஆனலும் ஆச்சிரம வேறுபாடும் பிறப்பு வேறுபாடாகக் கருதப்படுமென்றும் அதனல் நீடித்த ஆயுளைப் பெறலாமென்றும் ஸ்ரீ ஆதி சங்கரர் சரித்திரம் முதலியவற்ருல் இவ்வழக்கம் விளங்குகிறதென்றும் பண்டிதர்கள் சொல்லுகிருர்கள். கொங்குவேளிர் இந்நூல் செய்து வருகையில் தம் அகால மரணத்தைச் சோதிடரால் அறிந்து, இந்நூலைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கவலையுற்று, இல்லத்தினின்றும் நீங்கி வானப்பிரத்தமும், பின் அதனின்று நீங்கித் துறவறமும் பூண்டு இந்நூலைப் பூர்த்தி செய்திருக்கலாமெனத் தெரிகின்றது. "மூன்று பிறப்புற்ற" என்பதன் பின்னுள்ள "கொள்கை" என்பது இக்கருத்தை வலியுறுத்தும்" என்று எழுதுகின்ருர். இது எதற்காக எழுதப்பட்டதெனின் "பெருங்கதை"யின் ஆசிரியராகிய "கொங்குவேளிர்" என்பார் மூன்று பிறவிகள் எடுத்து அந்நூலை முடித்தார் என்ற கதையைக் கூறி அது இவ்வாறிருக்கலாம் என டாக்டர் சாமிநாதய்யரவர்கள் கூறுகின்ருர். இதனின்றும் நாம் அறிவது மனிதனின் வாழ்நாளில் கடந்து செல்லும் பல பருவங்களே "பிறவிகள்" எனக் கருதப்படும் என்பதே. பிறந்து, பின் இறந்து, மீண்டும் பிறப்பதன்று.

வீடு என்பது மேலுலகம் என்று கூறுவர். வள்ளுவர் இதனை "புத்தேள் உலகு" "தாமரைக் கண்ணன் உலகு" "வானோர்க்குயர்ந்த உலகம்" எனப் பல இடங்களில் கூறுகின்ருர். பழம்பெரும் நூல்களுள் இவற்றிற்கு "பகலும், இரவும், இன்பமும், துன்பமும் இல்லாத உலகம்" என்று விளக்கம் கூறப் பெறுகின்

றன. இத்தகைய ஒன்று உண்டா இல்லையா என்பது தெளிவற்ற ஒரு கருத்தாகும். ஒரு சில நாட்களுக்கு முன்னர் ஒரு செய்தித் தாளில் பின்வரும் செய்தியைப் படித்தேன்.

"நாம் வசிக்கும் உலகம் போலவே கோடிக்கணக்கான மைல்களுக்கப்பால் இருந்து வருகிறதா? அப்படி, இருப்பது சாத்தியமே தான் என்று எடின்பரோ பல்கலைக் கழகத்தின் தலைவர் ஸர். எட்வர்ட் ஆபிள்டன் கருதுகிறார். எங்கோ ஒரு இடத்திலிருந்து கிளம்பிய அலைகள் 10,00,00,000 (பத்துக் கோடி) வருடங் கழித்து பூமியில் சேர்ந்துள்ளதை ரேடியோ டெலஸ்கோப் மூலம் கண்டு பிடித்திருப்பதாகவும், ஆகவே இவ்வுலகம் போலவே மற்றொரு உலகம் இருப்பது கூடச் சாத்தியமாக இருக்கலாம் என்று அவர் கூறினார்.

(தமிழ் நாடு 10—7—'53 இதழ்)

இச்செய்தியையும் நம்புவதற்கில்லை. அப்படியே உண்மையாயிருப்பினும், இவ்வுலகம் போன்றே தான் இருக்குமெனக் கூறுவதால் பழம் நூல்களின் கருத்துக்கு மாறுபடுகிறதல்லவா? ஆக வீடு என்பது என்ன என்பதும் விளங்காதொன்று.

தொடர்ந்த குறட் பாக்களுக்குச் செல்வோம்.

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு.

என்பது "அறன் வலியுறுத்த"லில் உள்ள முதற் குறள்.

இங்கு "சிறப்பு" என்ற சொற்குப் பரிமேலழகர் வீடுபேறு என்று பொருள் கொண்டுள்ளார். ஆனல் சிறப்பு என்பது உலக வழக்கில் பல வகைகளில் பொருள் படும். அறிவுச் சிறப்பு, பொருட் சிறப்பு, குணச் சிறப்பு, அறத்தினுலுண்டாகும் சிறப்பு, வீடு ஒன்றே மட்டும் அன்று, இவ்வுலகிலும் பலவாகும். அறம் என்பது கொடுத்தல் என்ற ஒரே பொருளில் வழங்கும் சொல்லல்ல. வாழ்க்கை நடாத்தக் கடைப்பிடிக்கும் செவ்விய முறை களுக்கும் அறம் என்று பெயர்.

அழுக்கா றவாவெகுளி இன்னுச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்

என்ருர்.

அஃதாவது பொருமையும், ஆசையும், சினமும், கடுஞ்சொல்லும் தோன்றுகின்றன. பொருளாதார நிலை ஒவ்வொருவருக்குப் போதுமான அளவினதாக இருக்கு மானல் மேற்குறிப்பிட்ட குணங்கள் அறவே இருக்காது. மீண்டும் "சிறப்பு" என்ற சொல்லுக்கு வரலாம். வேலை செய்யும் திறன் அனைவருக்கும் ஒரு பெற்றியதாய் இராது என்று முன்னர் குறிப்பிட்டேன். ஒருவர் செய்கின்ற தொழிலால் குறைந்த பொருளையும் பெற வேண்டியதாக இருக்கும். அறிவு நிறைந்தவன் பொருளீட்டத்தில் குறைந்தவனுக இருக்கலாம்.

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு

என்ருர் வள்ளுவர்.

இது 'ஊழ்' என்ற அதிகாரத்துட் கூறப்பெற்ற குறளாயினும், இங்குப் பொருந்துதல் காண்க. வள்ளுவர் ஊழில் நம்பிக்கையுடையவரெனினும் அவர் கூறுகின்ற வகை வேறு, மற்றவர்கள் கூறுவது வேறு. இங்கு அது பற்றி விரித்தல் இயலாது.

பொருள் மிகுதியாகப் பெற்றார் கையினின்றும் பொருள் ஏற்ற அளவு தேடாதாருக்கும் போதுமான அளவு பொருள் செல்ல வேண்டும். அதுதான் இங்கு சிறப்பு. அதாவது இங்கு தொழில் நடத்துபவர் ஒருவரெனின், அத்தொழிலைச் செய்பவர் வேறொருவர். தொழில் நடாத்துவோருக்கு பொருள் வருவாய் பெருகும், அவ்வாறு பெருகுங்கால் தொழில் நடாத்தற்குத் துணைநின்றவர்க்கு ஈட்டப்பெற்ற பொருளில் ஒரு பெரும் பகுதி சேருவது தான் சிறப்பு. "செல்வமும் ஈனும்" என்றது தொழிலால் கிட்டிய பயனை இணை உரிமையாக நடாத்தினோரும், செய்தோரும் நுகர்ந்த பின் அத்தொழில் மீண்டும் நன்கு கவனிக்கப்பெறும். ஆதலால் அது நன்கு வளர்ந்து செல்வத்தைப் பெருக்கும், என்றவாறு. அவ்வாறு பொருளானது இணை உரிமையாக நுகரப்பெறல் வேண்டுமெனினும், கணக்குண்டு. செய்கின்ற தொழிலின் தன்மை, அத்தொழிலைச் செய்கின்றவனது திறமை, தொழிலை நடாத்துவோனுக்கு கிட்டுகின்ற வருவாய் ஆகியனவற்றைப் பொறுத்தே பொருளைப் பங்கிட வேண்டும்.

ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி

என்பது வள்ளுவர் வாக்கு.

பொருள் வருவாயின் தன்மைக் கேற்றாற் போல் பங்கிட்டு அளித்தல் வேண்டும். பொருள் வருவாய் குறையுமானல் அதற்கேற்றாற் போல் பொருளைப் பங்கிடு தலும் மிகக் குறையுமானல் அதனல் தீமை இல்லை. அது தான் உள்ள தொழிலை விரிவு படுத்தி அதனல் உண்டாகும் பயனை நன்கு நுகரும் வழியாகும். இதனைத் தொழில் நடாத்துவோரும், செய்வோரும் நன்கு உணரல் வேண்டும். அவ்வுணரும் தன்மைக் குறைவால் தான் வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் நேருகின்றன.

ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை

என்பது தமிழ் மறை.

தொழில் நடாத்துதற்கு உரிய பொருளும், அதனற் பெறும் பொருளின் அளவும் நன்கு அறிந்தே பங்கீடு செய்யப்பெறல் வேண்டும். அவ்வாறு பொருள் செல்லும் வழியும், வருவாயின் தன்மையும் அறியாமலிருந்தால் தொழில் செய்வோர், நடாத்துவோர் இருவருக்கும் தொல்லை. நாட்டிற்கும் தொல்லை. அதனல் தொழில்கள் நின்று மக்கள் அவதியுற நேரும்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல்
இல்லாகித் தோன்றாக் கெடும்

என்றார் வள்ளுவர்.

அறம் செய்வதைக் காட்டிலும் மேன்மைப்படுத்துவது வேறெதுவும் இல்லை. ஆதலால் அதனைப் பார்க்கிலும் உயிர்களை மேன்மேலும் உயர்த்துவது இல்லை. அறம்

என்பது பங்கீட்டு முறை என்று இங்கு நாம் கொண்டுள்ளோம். பொருள் வருவாய் மிகுதியாக இருக்கும் காலத்தில் நட்டுத் துறையில் ஈடுபட்ட அனைவருக்கும் இணை உரிமை அளிக்கப்பெற்றால், தொழில்கள் பெருகி மேலும் மேலும் வளம் பெருகும். அவ்வாறில்லையாயின் நாட்டின் வளம் குன்றும். வறுமை மிஞ்சும்.

அறத்தினூங் காக்கமு மில்லை அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு

தொழிலுக்கு ஆக்கம் வேண்டுமானால் மக்கள் கூட்டமனைத்தும் அத் தொழிலால் பெறும் பயனை இணை உரிமையாக நுகரல் வேண்டும். அதுவன்றி ஒரு சாராரே முழுப் பயனைப் பெறுவாரேல் ஒருக்காலும் நாடு முன்னேறாது.

அறம் செய்தல் என்பது அனைவருக்கும் ஒரே அளவினதாக அமையும் எனக் கூறுவதற்கில்லை. பல திறப்பட்ட தொழில்களால் பல திறப்பட்ட வருவாய் காணப்பெறும். எனவே வருகின்ற வருவாயின் அளவை அறிந்தும், மிகுதியான வருவாய் கிடைப்பதற்குரிய உழைப்பினை பொறுக்கும் உடல் வலிமை உண்டா என்பதைச் சிந்தித்தும் அறம் செய்யப் பெறல் வேண்டும். சிறிய வருவாய் தேடுவோர் பெருமளவில் அறம் செய்தலும், பெரும் வருவாய் பெறுவோர் சிறிய அளவில் அறம் செய்தலும் ஆகா. அவ்வவர் ஆற்றலுக்கு ஏற்றவாறு அறம் செய்தே ஆதல் வேண்டும்.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்

எத்துணைச் சிறிய வருவாயுடையராயினும், உடனுழைப்பார்க்குத் தக்க ஊதியம் தராமலிருக்கலாகாது. அவ்வாறு ஈயாதான் எத்துணை உயரிய குலத்திற் பிறந்தானுயினும் பண்பாட்டின் குறைவால் தாழ்ந்த குலத்தானாகவே கருதப்படுவான். தன்னோடு உழைப்பானை வஞ்சித்து, அவனிடத்து வசைச் சொற்களைப் பெறுதலால் பயனில்லை.

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள

தேடப்பெறுகின்ற செல்வத்தை ஒருவன் தானும் நுகரல் வேண்டும். தனக்குத் துணை நின்ற பிறரையும் நுகர விடுதல் வேண்டும். அவ்வாறன்றித் தானே முழுச் செல்வத்தையும் நுகர்ந்து; பிறரைத் துன்புறுத்துவானேல் பிறரால் தனக்குப் பழிச் சொல் கிட்டுமே யன்றி தனது வருமானம் பெருகுகின்ற வழி உண்டாகாது. தனக்குக் கிட்டும் பொருளால் தானும் மகிழ வேண்டும். தன்னைச் சார்ந்தோரையும் மகிழ்விக்க வேண்டும். அம்மகிழ்ச்சி இல்லையாயின் கோடிக்கணக்காக பொருளீட்டினும் அதனுல் எவ்வகைப் பயனும் விளையாது.

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்

ஒருவனுக்கு வருகின்ற வருவாய் சிறிய அளவினதாக இருப்பினும், பிறருக்குச் செய்ய வேண்டிய கடமையை அறிந்தவனே உயிரோடிருப்பவனுகக் கருதப்படுவான். அவ்வாறு கடமையை உணராதவன் செத்தவனே ஆவான். பிறரால் இகழப் பெறுவான்.

இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கொல்கார்
கடனறி காட்சியவர்

தன்னோடு ஒத்துழைத்தவனை வஞ்சித்தல் வேண்டுமென்ற எண்ணம் ஒருவனிடம் என்றுமே குடிகொள்ளலாகாது. அவ்வெண்ணம் தோன்றுமேல் அது அவனது இழிவை அவனே தேடிக் கொள்ளுவதாகும். உள்ளத்தில் குற்றமற்றவனாக ஒழுகுதல் வேண்டும். பின்னர் புறத்தும் குற்றமிலனாதல் வேண்டும். உள்ளத்தின் செய்கை நற்செய்கையாயின் வெளியிலும் நற்செய்கையும், புகழும் தோன்றும்.

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

பிறரை வஞ்சித்துத் தாம் மட்டும் வாழ்தல் வேண்டுமென எண்ணும் மாசு படைத்த மனத்தோர், பிறர்க்கு ஈந்து மகிழும் பேற்றினை அறியாத கயவர். அவர் தம் பொருளும் களவுபோம், பெயரும் அழிந்துபடும். அத்தகையார் இருத்தல் நிலத்திற்குப் பெரும் சுமையாம்.

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

தன்னிடத்துள்ள வருவாயனைத்தையும் ஒன்று சேர்த்துப் பின்னாளில் பகிர்ந்தளிப்போம் என்று எண்ணலாகாது வாழ்நாள் குறைவு. குறைந்த வாழ்நாளில், உயிர் வாழும் நாளிலேயே புகழ் எய்துதல் வேண்டும். வாழ்நாள் முழுதும் ஈயாது வாழ்வோர் இறந்த பின் தூற்றப் பெறுவர். ஒருவர் இறந்த பின் அவரைப்பற்றி இவ்

வுலகோர் பேசும் சொற்களே இறந்தவரின் மறுவுலகமாகும். ஆகவே மறுவுலகம் இகழாதிருக்க ஈதலே நன்று.

அன்றறிவாமென்னா தறச்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை

எல்லா உயிர்கள் பாலும் அன்புடையராதல் வேண்டும். எவரையும் வஞ்சித்தலோ, அன்றி எவ்வுயிரையும் கோறலோ சிறிதும் ஆகாது. தன்னிடத்துள்ள பொருள் எதுவாயினும் பகிர்ந்து உண்ணலே சாலச் சிறப்புடைத்து. அவ்வாறு பங்கிட்டுண்பவனையே நூல் வல்லார் சிறந்தவராகக் கொள்வர்.

பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

திருவள்ளுவர் காலத்தில் நாம் இன்று காணுகின்ற கெய்யாவி நில ஊர்தி, (Motor) நிலக்கரி ஆவி நில ஊர்தி, (Train) வான ஊர்தி (Plane) போன்ற வசதிகள் இல்லை. அஞ்ஞான்று மாட்டு வண்டிகளும், சிவிகை என்னும் மனிதரால் எடுத்துச் செல்லப் பெறும் பல்லக்குகளுமே மிக்கிருந்தன.

ஒரு குறளில் சிவிகை எடுத்துச் செல்பவனைப்பற்றிக் கூறுகின்றார். ஒருவருக்கு விரைவாக கவனிக்க வேண்டிய அலுவல் தொலைவில் ஏற்பட்டு விட்டது. காலந்தாழ்த்தால் பொருளை இழக்க நேரும் வேறு வண்டிகள் இல்லை. என் செய்வது? சிவிகையிற்றான் செல்ல வேண்டும், சிவிகை தாங்குபவனோ தன் வயிற்றை நிரப்பத்தன் கடமையைச்

செய்கிறான்: சிவிகையில் செல்பவனுக்கு தன் கடமையைச் செய்ய வசதி வேண்டும். எனவே தொலைவு செல்லுவோன் சிவிகையில் அமர, சிவிகை தூக்குவோன் தன் கடமையைச் செய்ய, அலுவல் எளிதில் முடிகிறது. சிவிகையில் அமருவோனும், சிவிகை தூக்குவோனும், ஒத்துழைக்க மேற்கண்டவாறு நடக்கிறது. ஆகவே சிவிகை தூக்குவோனுக்கு இணை உரிமையான ஒரு பங்கு ஊதியம் கொடுத்தல் வேண்டும். அப்பங்கு கொடுப்பதன் பயன் தான் ஏறிச் செல்வோனுக்குச் செல்லும் வேலையை எளிதாக்குகின்றது.

அறத்தாறிதுவென வேண்டா சிவிகை
பொருதானோ டூர்ந்தா னிடை.

பெருஞ் செல்வம் சேர்த்து வைப்போர் பொது நலத்திற்காகச் செலவிடல் வேண்டும். நாட்டிற்கு வேண்டிய கல்வி நிலையங்கள் கட்டல், மருத்துவச் சாலைகள் நிறுவல் போன்றவை, அரசினரே மேற்கொள்ளல் இயலாது. அது போன்றனவற்றை செல்வர் தான் செய்தல் வேண்டும். ஈகை யறிந்த செல்வரிடத்துச் செல்வம் சேருமானல் அது ஒரு குளத்தில் நீர் நிறைந்திருந்தால் எவ்வாறு சாதி, மத, நிற வேறுபாடுகளின்றி அனைவராலும் பயன்படுத்தப் பெறுமோ அவ்வாறு அனைவருக்கும் பயன் பட்டு நன்மை விளைக்கும். குளத்திலுள்ள நீர் எவராலும் பயன் படுத்தப் பெறுவிட்டால், அழுகிப் பல நோய்களுக்கு இடமாதல் போல, பொருளைச் செலவிடாதார் நாட்டுக்குத் தீமையே செய்வார்கள்.

ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு

ஒரு மாமரம் அல்லது பலாமரம் ஊரின் நடுவே பழுத்திருந்தால் எவ்வாறு அதனைச் சுற்றியே மக்கள் கூட்டம் நிற்குமோ அதே போல அறத்தின் பயனை உணர்ந்தோரைச் சுற்றி எஞ்ஞான்றும் புகழ் மணம் பெருகும்.

பயன்மரம் உள்ளூர்ப்பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்.

வேப்ப மரத்தின் காய், இலை, பழம், பட்டை, பூ, வேர் அனைத்தும் சிறந்த மருந்தாகும். அதன் காரறுப் பட்டாலும் உடற்கு நன்மை விளைவிக்கும். அது போல பெருந்தன்மையுடையானிடத்துச் செல்வம் சேருமானால் நாட்டில் வருந்தத்தக்க இன்னல்களாகிய கல்வியின்மை, வறுமை, வேலையின்மை ஆகியன இரா.

மருந்தாகித்தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகையான் கட்படின்

மேற் கூறியவற்றால் அறம் என்பதன் பொருளை ஒருவாறு விளக்கினேன். ஆயினும் முழுதும் விளக்கினேன் இல்லை. அறம் செய்யாத நாளெல்லாம் வீண் நாளே ஆகும்; அறத்தால் எல்லையற்ற இன்பம் உண்டாகும். உலகில் பெரும் புகழோடு வாழ்தற்கும் அறமொன்றே வழியாகும். அறமல்லாதது பழியை உண்டாக்கும்.

# இல்வாழ்க்கை

இல்வாழ்க்கை என்பது ஒத்த அறிவும், குணமும், குடிச்சிறப்பும் உள்ள ஆணும், பெண்ணும் உள்ளத்தால் ஒன்றுபட்டு வாழ்க்கையை மேற்கொள்ளல் என்பதாம். ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர் சமூகத் துறையிலும், அரசியலிலும், அனைத்திலும் உரிமை பெற்றாராய்த் திகழ்ந்தனர். இன்றைய பாழ்பட்ட தமிழகம் சோதிடர் கையிலும், ஆரியத்தின் பிடியிலும் சிக்கித் தவிக்கின்றது. தொல்காப்பியர் காலத்திலும், திருவள்ளுவனார் காலத்தும், சோதிடமும், பொருளற்ற மணச் சடங்குகளும் ஒரு சிறிதும் இல்லை. மக்களது சொந்த விருப்பத்தின்படி நடக்க வேண்டிய இல்வாழ்க்கை சோதிடத்தின் ஆணைக்கு அஞ்சி நடப்பது கொடுமை! கொடுமை!! பதிவு மணமோ, அன்றித் தமிழ்த் திருமணமோ, மேல்நாட்டினரைக் கண்டு பின் பற்றப்பட்டனவன்று. அது ஐயாயிரம் ஆண்டுகட்கு முந்தைய நமது நாகரீகம்.

ஒரு ஆணும் பெண்ணும் உள்ளத்தால் ஒன்றுபட்டு இல்வாழ்க்கை நடாத்தற் பொருட்டுத் தொல்காப்பியர் எழு வகை ஒழுக்கங்களை வகுத்தார்.

> கைக்கிளைமுதலாப் பெருந்திணை இறுவாய்
> முற்படக்கிளந்த காமம் எழுதிணை என்ப.

என்ற தொல்காப்பிய அகத்திணை இயல் சூத்திரத்தான் இதனை அறியலாம். இவற்றுள், கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். அஃதாவது ஒரு தலைவி, தன்னை விரும்பாத தலைவனை விரும்புதலும் கைக்கிளையாம். பெருந்திணையாவது பொருந்தாக் காமம். அஃதாவது முதியோன் இளையாளை விரும்புதலும், இளைஞன் முதியோளை விரும்புதலும் பெருந்திணையாம். இவை ஒழிந்த ஏனைய ஐந்திணைகளையும், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பிரித்து, அவற்றிற்குரிய ஒழுக்கங்களையும், காலங்களையும், மலர் முதலியவற்றையும் குறித்தார்.

இவ்ஐவகை நிலங்களுக்கும் உரிய மணங்கள் இருவகையாம். ஒன்று களவு மணம். மற்றையது கற்பு மணம். களவு மணம் என்பது தலைவன் தலைவியர் தாங்களே ஒருவரது உள்ளத்தை ஒருவர் அறிந்து ஒன்றுபடுதல். அது இந்நாளைய பதிவு மணமும், வடமொழிக் காந்தருவமும் ஆம். கற்பு மணம் என்பது பெற்றோரும், மற்றோரும் இருந்து ஆணையும், பெண்ணையும் சேர்த்து வைத்தல். வடமொழியாளர் :– 1. பிரமம். 2. பிரசா–பத்தியம். 3. ஆரிடம். 4. தெய்வம். 5. காந்தருவம். 6. அசுரம். 7. இராக்கதம். 8 பைசாசம் என எண் வகையாக மணங்களைப் பிரித்தனர். தொல்காப்பியர் அவ்வாறு கொள்ளாது, காந்தருவம் ஒன்றினை மட்டுமே களவியலாகக் கொண்டார். இதனை,

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக்கூட்டங் காணுங் காலை

மறைஓர் தேயத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர்
இயல்பே.

என்றதனால் அறிக. துறையமை நல்லியாழ்த் துணைமை யோர் இயல்பு—துறையமைந்த நல்யாழினையுடையாரது பிரிவில்லாத இயல்பு என்று பொருள். கற்பு மணமானது தாய் தந்தையர் மனமுவந்து பெண்ணைக் கொடுப்பின் மணத்தலாம். இது,

கற்பெனப்படுவது காணமொடு புணரக்
கொளற்குரி மரபிற்கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே

என்ற சூத்திரத்தான் விளங்கும்.

தொல்காப்பியனார் வழி வந்த திருவள்ளுவனார், முன்னவரை ஒட்டியே களவியல், கற்பியல்களைக் காமத்துப் பாலிலும், அறத்துப் பாலில் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு, விருந்தோம்பல், அன்புடைமை ஆகிய அதிகாரங்களை வகுத்துள்ளார். ஒரு ஆடவன் தன் வழியே செல்லுகின்றான். ஒரு பெண் எதிர்ப் படுகின்றாள். அவளது அழகு அவனை ஈர்க்கின்றது, மனம் மயங்குகின்றது. அவளை அடைதல் வேண்டுமென விரும்பு கின்றான். "கனத்த குழைகளை அணிந்த இவள் தெய்வப் பெண்ணோ? அழகான மயிலோ? மனிதப் பெண்ணோ? இவள் யார்? தணிய முடியாத நெஞ்சு மயங்கு இன்றதே?" என்று எண்ணி வருந்துகின்றான்.

அனங்குகொல் ஆய்மயில் கொல்லோ
கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு

ஆயின் ஆடவனுக்கு ஒரு ஐயப்பாடு தோன்றுகிறது. "நாம் விரும்பும் தலைவி ஒருக்கால் நம்மை விரும்பாளாயின் என் செய்வது?" என்ற குறிப்போடு நோக்குகின்றான்.

குறிப்பே குறித்தது கொள்ளுமாயின் ஆங்கவை
நிகழும் என்மனார் புலவர்.

என்றார் தொல்காப்பியர். அஃதாவது தலைவனது குறிப்பைத் தலைவி ஏற்றுக் கொள்வாளாயின் இரண்டு உள்ளங்களும் ஒன்றுபடும் என்பது பொருள். இங்கே திருவள்ளுவர் கூறும் ஆடவனும் அதே கருத்தோடு தான் நோக்குகின்றான்.

இவனது குறிப்பை அவள் அறிந்து கொண்டாள். அவளுக்கும் இவன் மேல் விருப்பமுண்டாகின்றது. என்ன செய்வாள் பெண்? வாய் திறந்து சொல்ல வெட்கம். நேராக அவனை நோக்குவதற்கு நாணம். தலைவன் தன்னை நோக்கும் போது குனிந்து நிலத்தை நோக்குகின்றாள். தலைவன் வேறுபுறம் திரும்பும் போது தலைவனை நோக்கி நகுகின்றாள். தலைவன் கண்டு விடுகின்றான். உண்மை தெரிந்து விட்டது. இருவர் உள்ளங்களும் ஒன்றுகின்றன.

யானோக்குங்காலை நிலநோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்.

தலைவன் தனக்குக் களவியலால் கிடைத்த தலைவியை உயிரினுஞ் சிறந்தாளாகக் கருதுகின்றான். தன்னை உடலாகவும், தலைவியை உயிராகவும் எண்ணுகின்றான். அவள் தன்னை விட்டு அகன்றால் உடலை விட்டு உயிர் நீங்குவது போன்ற உணர்வு தோன்றுகின்றது.

உடம்பொடு யிரிடை என்னமற் றன்ன
மடந்தையோ டெம்மிடை நட்பு.

தன் கண்களால் வேறு உலகக் காட்சிகளைக் காண அவன் விரும்புவதில்லை. கண்ணினுள் உள்ள பாவையால் அவனுக்குத் துன்பமுண்டாகின்றது. ஏனெனின் அப் பாவை பிற உலகத் தோற்றங்களை அவனுக்குக் காட்டு கின்றது. ஆதலின் அப்பாவையை விலகச்செய்து தன் காதலியாகிய அப்பாவையை அதில் அமர்த்த வேண்டும்.

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற் கில்லை இடம்.

பெண் மட்டுமென்ன? அன்பிற் குறைந்தவளா? ஆடவனே கருமணியிலுள்ள இந்தப் பாவையை அகற்றி விட்டுத்தான் இந்தப் பாவையை அமர்த்த வேண்டும். ஆனால் பெண்ணோ தன் காதலனைக் கண்ணினுள்ளேயே எப்பொழுதும் வைத்துக் காக்கின்றாள். அவளது கண்ணை விட்டு அவன் விலக மாட்டான். அவளையே அறியாமல் கண்ணை மூடினாலும் அதற்காக வருந்த மாட்டான் அவளது காதலன். அவன் மிகுந்த நுட்பமுள்ளவன்.

கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்

அவளது காதலன் என்றும் அவளது கண்ணிலேயே இருக்கின்ற காரணத்தால், கண்ணுக்கு மையிட்டால் அவன் மறைந்து விடுவான். அவளது பார்வையிலிருந்து மறைந்தாலோ அவளுக்கு வாழ்வில்லை. அன்றியும் மையிட்டால் அது கண்ணிலுள்ள தன் காதலனுக்குத் தொல்லை உண்டாக்குமே? ஆதலின் மையிட அஞ்சுகின்றுன்.

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து.

தனது காதலனை அவள் எண்ணாத நேரமில்லை. அவனையன்றி வேறென்றினையும் எண்ணாத அவளது நெஞ்சம் அவனையே தன்னுள் குடியேற்றி விட்டது. அதனல் வெப்பமான உணவுகளையும், உண்ண அஞ்சுகின்றுள். ஏன்? வெப்பமான உணவு தன் நெஞ்சினுள் உள்ள காதலனைச் சுட்டு விடுமே?

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து

ஆனல் எத்தனை நாட்களுக்குத் தான் இவ்வாறே இன்பமாகப் பொழுதுபோக்குவது? தலைவனுக்கோ பொருள் தேடுதற் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்ல வேண்டிய தொல்லை ஏற்பட்டு விட்டது. ஆனல் தலைவியோ அவனது பிரிவை ஆற்றுதாளாகின்றுள்,

அவன் சென்றுல் திரும்ப எத்தனை நாட்களாகுமோ? அவனது பிரிவைத் தாங்கவொண்ணாத அவள் ஒருக்கால் அவன் வருமுன் இறந்து விட்டால்? இவ்வாறெல்லாம்

ஏங்கித் தவிக்கின்றாள். அவளது தவிப்புத் தலைவன் மீது சினமாக மாறிப் பின் வருமாறு கூறுகின்றாள்.

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை

தலைவன் பிரிந்து சென்று பல நாட்களாயின. அவனிடமிருந்து ஒரு செய்தியுமில்லை. ஓரிரவு உறங்குகையில் தன் காதலன் விரைவில் வருவான் என்று தூதன் வந்து உரைப்பதாகக் கனவு காண்கின்றாள். அது உண்மை என எண்ணி அத்தூதனுக்கு விருந்தளிப்பதாக வாய் விட்டுக் கூவுகின்றாள். அப்பொழுது தோழி அவளைத் தட்டி எழுப்புகின்றாள். உடனே தலைவி கூறுகின்றாள்: "தோழி! என் காதலர் விரைவில் வந்து விடுவார் என்று கனவில் வந்து சொன்ன தூதன் எங்கே? அவனுக்கு விருந்திட வேண்டும்" என்றாள்.

காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து

கணவன் வந்து விட்டான். வந்தவுடனே மனைவியிடம் கூறுகின்றான். "இதுகாறும் நாம் பிரிந்திருந்தது பெருந்தவறு. இனிமேல் இப்பிறப்பில் பிரியோம்" என்று. இதனைச் செவியுற்ற அளவில் காதலிக்குச் சினம் மூண்டு விட்டது. பெண்களுக்கு சினமுண்டானால் வெளியிடும் உருப்பு கண்கள் தானே? கண்ணீர் ஆறுகப் பெருகுகின்றது. "ஓ! ஓ! நீர் இப்பிறப்பில் என்னைப் பிரியீரேல், மறுபிறப்பில் என்னை மறந்து வேறொருவளைக் காம் பற்றுவீரோ? நான் என்ன தவறிழைத்தேன்? ஐயகோ!" என்று அழுகின்றாள்.

இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனக்
கண்ணிறை நீர்கொண் டனள்

காதல் வாழ்வு இவ்வாறு நிற்க, இனி இல்லற வாழ்வு நடாத்தலைக் காண்போம். களவு மணம் இனி கற்பு மணமாக மாறுதல் வேண்டும். "கற்பு" என்றால் பெற்றோர் செய்து வைக்கும் மணமாகுல் திருமணத்திற்கு முன் தம் மகள் கணவனிடத்து நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பெண்ணுக்கு அவளது பெற்றோர் கற்பிப்பர். அவர்கள் கற்பித்த வழி நிற்றல் கற்பாம். இதனைத் தொல்காப்பியர் பின்வரும் சூத்திரத்தால் அறிவுறுத்துகின்றார்.

கற்புங்காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலுஞ் சுற்றமும் ஓம்பலும்
பிறவும்அன்ன கிழவோன் மாண்புகள்
முகம்புகல் முறைமையிற் கிழவோர்க் குரைத்தல்
அகம்புகல் வாயில்கட் குரிய

அஃதாவது கணவன் கற்பித்த வழி நிற்றல், அன்புடைமை, நல்லொழுக்கம், பொறுமை, விருந்தோம்பல் போன்ற தலைவியினது மாண்புகளை அவளது தோழிகள் தலைவனிடத்து புகழ்ந்து கூறல் வேண்டும் என்பதாம். காமம் என்றால் இங்கு அன்பு என்று பொருள். ஆக இல்வாழ்க்கை நடாத்துவோர் அன்புடையராயும், விருந்தோம்பல் முதலிய குணங்களை உடையாராயும் வாழ்தல் வேண்டும் என்பது விளங்கிற்று. ஆதலின் திருவள்ளுவர் இல்லற வியலில் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை

மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல் என்ற அதிகாரங்களை வைத்தார்.

திருவள்ளுவர் ஒருவரே பெண்ணிற்குச் சிறந்த பெருமை அளித்தார். பெண்ணினும் சிறந்த மனிதத் தன்மை வாய்ந்தார் எவருமில்லை. "மெல்லியலார்" என்ற சொல் சிறப்பாகப் பெண்ணினத்தையே குறிக்கும். ஆண்கள் எத்துணை அறிவுக் கூர்மை உடையரேனும் வன் நெஞ்சம் படைத்தோரேயாவர். ஒருவனுக்குத் துன்பம் என்றால் கண்ணீர் சிந்தும் பெண்ணின் நெஞ்சம். இத் தகைய பெருந்தன்மை வாய்ந்த பெண்ணினம் ஆணினத்தைவிட அறிவிலும் குறைந்ததன்று. இத்துணைச் சிறப்புக்களோடு கற்பும் சேருமானால் யாரே பெண்ணின் பெருமையை இகழ வல்லார்?

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்

இல்வாழ்க்கை நடாத்தும் பெண், பல்வகையானும் கணவனுக்கு உதவுகின்றவளாக இருத்தல் வேண்டும்.

செறிவும் நிறைவுஞ் செம்மையுஞ் செப்பும்
அறிவும் அருமையும் பெண் பாலான

என்றார் தொல்காப்பியர்.

அஃதாவது அடக்கமும், மறை புலப்படாமல் நிறுத்தும் உள்ளமும், மனக்கோட்டமின்மையும், செய்யத் தகுவன கூறலும், நன்மை தீமைகளை அறிவித்தலும், உள்ளக் கருத்தறிதலருமையும் பெண்மைக்குரிய இலக்கணமாம். கணவனது அறிவினையும், குணங்களையும்

நன்குணர்ந்து கிடைக்கின்ற வருவாய்க்குள் செலவிடும் தன்மையளாய் வாழ்தல் வேண்டும். கணவனுக்கு ஓர் இடுக்கண் நேர்வதானல் அதனைத் தவிர்த்தற்குரிய வழி வகைகளை நாட வேண்டும்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

பிறர் பழிக்கத்தக்க செயல்களை இல்வாழ்க்கை வாழ்வோர் எஞ்ஞான்றும் செய்தல் கூடாது. இல்வாழ்க்கை மகிழ்ச்சி நிரம்பியதாக இருத்தல் வேண்டும். வரவுக்கேற்ற செலவும், விருந்தோம்பலும், அன்பும் நிலவாத இல்வாழ்வு பிறரால் பழிக்கப்படும். கணவனும் மனைவியும ஒத்த உள்ளத்தினராய் இல்லப் பொறுப்புக்களை இணை உரிமையாய் ஏற்று நடாத்தும் வாழ்வே சிறக்கும். அப்பொழுது பிறருக்கு அஞ்ச வேண்டியதில்லை.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியஞ்சல் எஞ்ஞான்றும் இல்

கல்வி, அருள், பொருள், நல்வாழ்வு அனைத்தும் பெற்றிருந்தும் மக்கட்பேறு என்ற செல்வம் இல்லையானல் இல்வாழ்க்கை பயனற்றதாகி விடும்.

காமஞ்சான்ற கடைக்கோட்காலை
ஏமஞ்சான்ற மக்களொடுதுவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன்பயனே

என்பது தொல்காப்பியம். அஃதாவது தலைவனும் தலைவியும் வயதான பிறகு உரிமைச் சுற்றத்தோடு கூடி நின்று தம் மக்களைக் கண்டு களித்து அவர்களை இல்லறத்தி லமர்த்தித் தாங்கள் வீட்டின்பம் பெற துறவறம் மேற் கொள்ளல் வேண்டும் என்பதாம். தாய் தந்தையர் வழி வந்தவர்கள் இல்லையானல் அவர்களது குடிச் சிறப்பு அழியும். யாழ், குழல் முதலிய இசைக் கருவிகள் எப் பொழுதும் இல்லின் கண் இசைத்துக் கொண்டே இருப்பினும் ஒரு குழந்தையின் மழலை மொழிக்கு ஈடாகா.

குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

இல்வாழ்வான் முதற்கண் தன் மனைவி, மக்களிடையே அன்புடையனய் வாழ்தல் வேண்டும். தன் மனைவி, மக்கள், சுற்றம் முதலியோரிடத்துச் செலுத்தும் அன்பு தான் முதிர்ந்து ஊருக்கும், நாட்டிற்கும் செய்யும் பணி யாக மாறும். அன்பே அறமாம். நல்லவற்றைச் செய் வதற்கு மட்டும் அன்பு உரியதன்று. தன் உயிருக்கே தீமை விளைவிக்கின்ற வீரத்திற்கும் அன்பு தான் துணை நிற்பது. ஒருவன் போருக்குச் செல்லுகின்றுன் என்றல் தன் வீட்டாரும், நாட்டாரும் வாழ்தல் வேண்டும் என்ற அன்புள்ளத்தால்தான்.

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

இல்லம் தேடி வருகின்ற விருந்தினரை, இன்சொல் லும், நகை முகமும் கொண்டு வரவேற்று, ஏதோ உள்ள

கூழோ, கஞ்சியோ இல்லை என்னது அளித்துப் போற்றலே கணவன் மனைவியரது தலையாய கடனகும். அஃதன்றி கடுமுகமும், சுடுசொல்லும் உடையராய் உண விட்டால் வந்த விருந்தினரது மனம் வருந்தும். அது முகர்ந்து பார்க்கும் பொழுதே குழைந்து போகும் அனிச்ச மலரைப் போன்றதாகி விடும்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

இத்தகை சிறந்த இல்வாழ்வு நடாத்துகின்ற இந்த நாடும் சமூகமும் இன்று உரிமை அளிக்கின்றதா? தனி மனிதன் தன் விருப்பம் போல் வாழ்வு நடத்த உரிமை இல்லையா? இல்லையாயின் இந்த நாடு ஒழியட்டும்!

உரிமை, உரிமை என்று பேசுகிறோமே? எங்கே உரிமை? அரசியலில் உரிமை இருந்தால் மக்கள் இன்று அல்லல்பட மாட்டார்களே? சமூகத் துறையிலே உரிமை இருந்தால் சோதிடம் ஒழிந்திருக்க வேண்டுமே? தமிழகமே நீ என்று தான் பழஞ்சிறப்பை அடையப் போகிருய்? அதற்கும் சோதிடம் பார்த்து கெட்டொழியப் போகின்றுய்!

# வள்ளுவரின் அரசியல்

"ஆங்கிலம் படித்த தமிழர்கள் தாங்கள் அந்த மொழி இலக்கியங்களில் படித்து அனுபவித்த "சமத்துவம்", "ஜனநாயகம்", "பெண்களின் உரிமை" முதலான புதுமைக் கருத்துக்களைத் திருக்குறளில் புகுத்த விரும்பியதால், திருவள்ளுவரின் நோக்கையும், குறளின் போக்கையும் தெரிந்து கொள்ள முடியாமல், குறட் பாக்களுக்குப் பாட பேதம் கற்பிக்கத் துணிந்து விட்டார்கள்" என்கின்றார் தமிழ் நாட்டின் மதிப்பிற்குரிய பெரியார் ஒருவர். மேற்கண்ட கருத்திற்கு முற்றிலும் எதிரிடையாக, முன்னவரினும் மிக மிகக் கற்றவரும் தமிழ் நாட்டின் எல்லாக் கட்சியினராலும் போற்றப் படுகின்ற பேரறிஞர் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்:- "திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர், அவர் இன்றுள்ள வாழ்க்கையை எவ்வாறு விளக்க முடியும் என வினவலாம். காலம் மாறினும் உண்மைகள் மாறுவதில்லை. காலத்தின் மாறுதல் உடையின் மாறுதல் போன்றவை. அடிப்படை உண்மைகள் உயிர் போன்றவை. திருவள்ளுவர், வாழ்க்கையின் அடிப் படையாகவும், பொதுவாகவும் உள்ள உண்மைகளைக் கண்டு எழுதியுள்ளமையால் பல்வேறு காலத்தவரும் அவற்றைப் போற்ற முடிகின்றது. இருபதாம் நூற்றாண் டின் இடைப்பகுதியில் வாழும் நாமும் அவ்வாறு நம்

வாழ்க்கையமைப்புக்கு ஏற்றவாறு திருவள்ளுவரைக் கற்று உண்மைகளை உணர முடியும்." இக்கருத்தினைச் சார்ந்தே யான் எழுதுகின்றேன். சரி அல்லது தவறு என்பதனைக் கற்போரே முடிவு செய்க.

திருவள்ளுவர், இக்காலத்தில் கூறப்படும் "குடியாட்சி" முறை பற்றிக் குறிப்பிடவில்லையாயினும் அவர் தம் அரசு, "குடிக்கோனாட்சி" என்று குறிக்கப் படலாம். குடிக்கோனாட்சி என்றால் மக்களைத் தழுவிய மன்னவனது ஆட்சி என்பது பொருளாகும். அஃதாவது மன்னவன் பெயரளவில் ஆளுவோனாகவும், மற்ற அரசாங்கப் பொறுப்புகளை அமைச்சர் குழுவினர் கவனிப்பதாகவும் உள்ளதே குடிக்கோனாட்சியாகும். வள்ளுவர் கூறும் மன்னவன் வழி வழியாக மன்னர் குடியில் தோன்றினவன் அல்லன். அம் மன்னவன், மக்களுக்கு அடங்கியவன். உண்மையை உரைத்தால் மக்களால் மக்களின் நலனுக்காகத் தேர்ந்தெடுக்கப்பெறும் தலைவன் தான் மன்னவன் என்று கூறுவதற்குத் தக்க ஆதாரங்கள் திருக்குறளில் உள்ளன.

ஒருவன் மன்னவனாகத் தேர்ந்தெடுக்கப் பெறுதற்கு வேண்டிய தகுதிகள் எவை என்று அறிதல் வேண்டும். ஒரு நாட்டினை ஆளும் பொறுப்பினை ஏற்போன் விடா முயற்சி, கல்வி, துணிவுடைமை இம் மூன்றும் உடையவனாய் இருத்தல் வேண்டும். நாட்டின் நலன்களைப் பெருக்கவல்ல விடா முயற்சியும், சிறந்த சீர்திருத்தங்களை நாட்டில் புகுத்தவல்ல கல்வி அறிவும், பிறநாட்டார் படையெடுத்து வருங்கால் அவர்களைப் புற முதுகு காட்டி ஓடச் செய்யவல்ல துணிவுடைமையும் எவருக்கு உண்டோ

அவரே மன்னனாவதற்குத் தகுதியுடையவர். இக்குணங்களற்றவனை மன்னனது மகனாயினும், மன்னனாகக் குடிகள் ஏற்க மாட்டார்கள்.

தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு.

மன்னனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றபின், வீண் ஆரவாரம் நிரம்பியவனாய், கடுஞ்சொல்லுடையனாய் இருப்பின் மக்களால் அவன் வெறுக்கப்படுவான். நாட்டில் அமைதியின்மையும், புரட்சியும் உண்டாகி வெளியார் படை எடுப்பிற்கும் இடனாகும். அரசன் காட்சிக்கு எளியனாயும் கடுஞ்சொலலற்றவனாயுமிருப்பின் அவனது நாடு எல்லாவற்றினுஞ் சிறந்து விளங்கும்.

காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

மன்னவன் ஒருவனாலேயே ஒரு நாடு ஆளப் பேறுமானால் அது ஒரு தலை ஆட்சியாகும். ஆனால் வள்ளுவர் விரும்பியது ஒரு தலை ஆட்சி அன்று. மக்கள் விரும்பும் மன்னனது ஆட்சியே சிறப்பாகும். மக்களது நலனை நாடும் அரசுக்குச் சேனையும், குடி மக்களும், அமைச்சரவையும், நண்பர்களும், கோட்டையும் பெரும் வலிமை உடையவையாக அமையும். இவ்வாறும் செம்மையானவையாக அமைந்தவனே சிறந்த அரசன் இவற்றுள் எது குறையினும் அவ்வரசு அழியும்.

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

அமைச்சரவை அமைப்பதாயின் அதுவும் அரசனால் அமைக்கப்படுவதல்ல. அப்படி அரசனால் அமைக்கப் படும் அமைச்சரவை மக்களின் நலனைக் கருதிச் செய லாற்றாது. அது ஒரு தலை ஆட்சியாகிவிடும். அமைச்சர் களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களே செய்கின்ற செயல்களில் திட்பமுடைமையும், குடிகளைக் காக்கும் திறனும், நீதி நூல்களைக் கற்று செய்யத்தக்கன வற்றைச் செய்தலும், விடாமுயற்சியும் உடையோரே நல்லமைச்சராவர். மேற் கூறிய தகுதிகள் அற்றோர் குலத்தால் உயர்ந்தோராயினும், செல்வம் மிக்கவரா யினும், எவராயினும் அமைச்சராகார்.

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

நாட்டைப் பிறர்க்குக் காட்டிக் கொடுக்கும் நெறி தவறிய அமைச்சரினும் பகைவர் வேறெவரும் வேண்டிய தில்லை. அவர்களுக்கு நாட்டின் நலனைப் பேணுவதில் கவலை, இல்லை. தன்னலம் மிக்கவர்கள்.

பழுதெண் ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி யுறும்.

ஒரு வேலை எந்தெந்த வகையில் செய்தால் வெற்றி அளிப்பதாகவும், மக்களுக்கு நன்மை பயப்பதாகவு மிருக்குமென்பதை அறிந்தும், அரசன் கலங்கிய காலத்து அவனைத் தேற்றியும் அவனுக்குத் துணிவுண்டாகுமாறு செய்பவரே நல்லமைச்சராவர்.

தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

இங்கிலாந்தில் முதலாவது சார்லெஸ், இரண்டாவது ஜேம்ஸ் என்ற இரு மன்னர்கள் கொடுங்கோலாட்சி நடாத்தினர். அஃதாவது தாங்கள் இறைவனின் ஒற்றர்கள் ( Devine right theory ) என்றும், பாராளு மன்றத்தின் சட்ட திட்டங்களுக்குச் செவி சாய்க்க இயலாது என்றுங் கூறி மக்களைத் துன்புறுத்தினர். அதன் விளைவாகப் பாராளு மன்றம் அவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, உயிர்ப் பலி வாங்கிற்று என்று இங்கிலாந்து நாட்டின் வரலாற்று ஏடுகள் கூறும். அவ்வளவு நீண்ட கால வரலாறு நமக்கு வேண்டாம் அண்மையில் எகிப்து மன்னன் பரூக் நாட்டை விட்டு ஓடியதும், இந்தியாவில் அறநூறு சிற்றரசர்கள் வீழ்ந்ததும் எதனுல்? இவற்ருல் நாம் அறிவது மக்கள் விருப்பத்திற்கு எதிரிடையாக மன்னவன் ஒருக்காலும் ஆள முடியாது. மக்களை ஆள்வது வெங்கோலன்று, செங்கோலே.

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூங் கோடா தெனின்

இங்கே ஒரு நயம் கவனிக்கப்பட வேண்டும். "வேலன்று வென்றி தருவது ' என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். அதாவது அடக்கு முறைகளால் மக்களை ஆள முடியாது என்று. அடுத்த வரியில் " மன்னவன் கோலதுவே வென்றி தரும்" என்றல்லவா சொல்லி இருக்க வேண்டும்? அவ்வாறு சொல்லவில்லை. " மன்னவன் கோலதூஉங்கோடாதெனின் " என்று அழுத்தமாகச் சொல்லுகின்ருர். அதற்கு என்ன பொருள்? மக்களுக்குப் பகையாக அரசு ஒரு விஞடியேனும் இருக்குமாஞல் நாட்டில் பெரும்புரட்சி ஏற்பட்டு விடும்.

வள்ளுவர் குடியரசுக்கு எத்தகைய அடிப்படையை நாட்டி இருக்கிறார் பார்த்தீர்களா?

ஒரு சிறந்த நாடு என்றால் எப்படி இருக்க வேண்டும்? காலந் தவறாமல் உழவு செய்து விளைவிப்போரும், நன்னெறிகளில் ஒழுகுவோரும், கல்விச் செல்வம், பொருட் செல்வம், கேள்விச் செல்வம், அருட் செல்வம் ஆகியன நிரம்பப் பெற்ற தாழ்விலாச் செல்வரும் சேர்ந்திருப்பதே சிறந்த நாடாகும். தக்கதொரு அரசியல் வகுக்கப் பெறாத நாட்டில் மேற்குறித்தவாறு நிகழாது. தொழில்களும், கல்வியும், செல்வமும் வளருவது நாட்டின் ஆட்சியைப் பொறுத்ததே ஆகும்.

தள்ளாவிளையுளுந் தக்காரும் தாழ்விலாச்

செல்வரும் சேர்வது நாடு

எத்தகைய ஆட்சி இருப்பினும் அதற்கு ஒரு எதிர்க் கட்சி இருந்தே தீரும். அரசாங்கத்தார் தங்கள் அலுவல்களைச் சீராகக் கவனிக்க வேண்டுமானால், அவர்களது குற்றங் குறைகளை எடுத்துக் கூறித் திருத்துவதற்கு ஒரே ஒரு வலிமையுள்ள எதிர்க் கட்சி போதும். அதன்றி நாட்டில் பல பல கட்சிகள் தோன்றிக் கட்சிக்குக் கட்சி கருத்து வேற்றுமை கொண்டு தங்களுள் சச்சரவிட்டுக் கொண்டிருந்தால் அரசாங்கத்திற்குத் தலைவேதனையும், நாட்டில் செங்குருதி ஆறு ஓடுவதும் தான் மிஞ்சும். அந்த நாட்டில் எத்தகைய அரசும் நிலைத்து நிற்காது.

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்

கொல்குறும்பும் இல்லது நாடு

எதிர்க் கட்சியாரின் சுடுசொற்களை அமைதியாக ஏற்றுக் கொண்டு, வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்யும் ஆட்சியே சிறந்த ஆட்சியாகும். அதன்றி எதிர்க் கட்சியினரை அடக்குவதற்குப் படை வலிமையைப் பயன்படுத்தினால் அது மக்களின் உணர்ச்சிப் பெருக்கினைத் தூண்டிப் பெரும் புரட்சியை உண்டாக்கி நாட்டின் அழிவுக்கு வழி கோலும்.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கு முலகு

ஓரரசுக்குப் படை வலிமை வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். போரிற் பின் வாங்காத ஆற்றல் படைத்த வீரர் வேண்டும். மக்கள் அரசியலாரிடத்து அன்புடைய ராய் இருந்தால் தான் தங்களது நாட்டைப் பிறர்க்குக் காட்டிக் கொடுக்காத ஆண்மையோடு போரிடுவார்கள். படை வீரர்கள் எவ்வாறிருப்பினும், படைத்தலைவர் உண்ட அகத்தைக் காட்டிக் கொடுக்கும் கயவராக இருத்தலாகாது. அவ்வாறு நல்ல படைத்தலைவர்களில்லை யேல் படைகளிருப்பினும் பயனில்லை.

நிலைமக்கள் சாலவுடைத்தெனினும் தானை
தலைமக்க ளில்வழி இல்.

போர் வீரர்கள் எவ்வாறிருக்க வேண்டுமெனின், தம் நாடு வீழ்ச்சியடைவதைக் காணச் சகியாதாராய், தன் உயிரைக் கொடுத்தாயினும் நாட்டைக் காக்கின்றவ ராய் இருத்தல் வேண்டும். தன்னுடைய சாவைக் கண்டு அரசன் வருந்துமாறு ஒருவன் சாவானானால் அச்சாவை இரந்தாவது பெறுதல் வேண்டும்.

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோள் தக்க துடைத்து

இதுகாறும் கூறியவற்ருல் திருவள்ளுவர் கோனாட்சி பற்றிக் குறிப்பிட்டாராயினும், குடியரசின் அடிப்படையாகிய குடிக்கோனாட்சியே அவரது அரசியலென்பதை அறிந்தோம். தற்போது இங்கிலாந்தின் அரசியல் ஒருவாறு இதனோடு ஒட்டியதாயுள்ளது. ஆனல் இங்கிலாந்தில் மன்னர் வழி வந்தவர்கள் மன்னராகலாம். வள்ளுவர் தகுதியை மட்டும் கருதினர்.

திருக்குறள் எல்லாக் காலங்களுக்கும் பொருந்துமாறு இயற்றப்பட்ட பெரு நூல். இதில் காலத்திற்கேற்ற விளக்கங்களை நாம் கையாளா விட்டால் திருக்குறள் என்ற ஒரு நூல் நம் நாட்டில் தோன்றியும் தோன்ருதது போல் தான். வள்ளுவருக்கும் நாம் நன்றியுடையவர்களாக மாட்டோம். சில குதர்க்கவாதிகளே குறளில் பாட பேதம் உண்டாக்குகிருர்களன்றிக் கற்றவர்கள் அவ்வாறு செய்வதில்லை. ஆங்கிலம் கற்ற தமிழ்ப் புலவர்களைக் குறை கூறுவது அறியாமை. நம் மொழியிலுள்ள நூலைப் பிற மொழி நூல்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தான் நமது நூல்களின் பெருமை விளங்கும்.

# இறைவழிபாடு

திருக்குறளில் "கடவுள்" என்ற சொல்லே யாண்டும் காணப்பட்டிலது. முதல் அதிகாரத்திற்குக் "கடவுள் வாழ்த்து" என்ற தலைப்பைப் பரிமேலழகரே வேய்ந்துள்ளார். திருவள்ளுவர் அத்தலைப்பிட்டிருந்தால் "கடவுள்" என்ற சொல் ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங்குறட்பாக்களில் ஏதேனும் ஒரு குறளிலேனும் வந்திருக்கும். "இறைவன்" என்ற சொல் உலக முதல்வனையும், நாடாளும் வேந்தனையும் குறிக்கும் இருபொருளுடைய ஒரு சொல்லாய்ப் பல குறள்களிலும், "தெய்வம்" என்ற சொல் சில குறள்களிலும் வந்துள்ளன. புலவர்கள் ஒரு நூலைத் தொடங்குங்கால் உலகைக் காக்கும் இறைவனையேனும், தாங்கள் எழுதத் தொடங்கும் நூலுக்கு ஏற்புடைக் கடவுளையேனும் வழிபட்டுப் பின்னர் நூலைத் தொடங்குதல் மரபு. அவ்வாறே வள்ளுவரும் உலகுக்குப் பொதுவான ஒரு நூலைச் செய்தவராகலின் உலக முதல்வனுக்கு ஒரு பெயரை இடாமல் "இறைவன்" எனவே பெயரிட்டு "இறைவழிபாடு" என்று தலைப்பிட்டிருக்கலாம் என்று எண்ணுகின்றேன். தலைப்பைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் அதே நேரத்தில் திருவள்ளுவர் நாத்திகர் என்றும் துணியக் கூடாது. எதையும் பொதுமைக் கண் கொண்டு நோக்க வேண்டும் என்பது

வள்ளுவர் கொள்கை. பாயிரம் வள்ளுவர் பாடியதன்று என்று சாதிப்பாரும் உண்டு. ஆனால் பாயிரத்திற்கும் மற்ற அதிகாரங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டென்பதையும், பாயிரம வேறொருவரால் பாடப் பெற்றிருப்பின், அத்தகைய தொடர்பு இராதென்பதை உணருகிறார்களில்லை. ஆயின், சைவசித்தாந்தப்படியோ, வைணவ சம்பிரதாயப்படியோ வேறு எவ்வகை மதக்கோட்பாடுகளுக்குட்பட்டோ, திருக்குறள் முதலதிகாரத்திற்கு உரை கூறுவது அறியாமை. மதவாதிகள் குறளைத் தங்களுக்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற தவறான கருத்தால் தங்கள் தங்கள் கருத்துக்களை குறளின் மேலேற்றிச் சொல்லுகிறார்கள். அது முற்றிலுந் தவறு. எல்லா மதங்களையும் கடந்த உயரியதான மெய்ப் பொருளை உணர்த்துவதே வள்ளுவரின் நோக்கம். உலகுக்குப் பொதுவாக உயிருள்ளனவும், இல்லனவுமாகிய எல்லாப் பொருள்களையும் இயக்குவிக்கின்ற ஒரு விசை உண்டென்பதை எவரும் மறுக்க இயலாது. அந்த விசை தான் காற்று, மழை, வெயில் முதலியன இன்றி உலகில் எவ்வகைத் தொழிலும் நடைபெறாது. மனிதன் அறிவு விளக்கம் பெறுமலிருந்ததாகக் கூறப்படும் அக்காலத்தில் இயற்கை வழிபாடு நடத்தியதும் மேற் கூறிய காரணத்தால் தான். பிறகு மக்களை ஒழுக்க முறையில் வாழச் செய்வதற்காகத் தோன்றிய மதங்கள் பலவகையான தவறான கருத்துக்களை மக்களிடத்துப் பரப்பி அறியாமையை மிகுதிப் படுத்தின. திருவள்ளுவர் காலத்தும் இத்தகைய அறியாமையால் விளைந்த கேடுகள் மிகுந்திருந்தன. அவற்றை எல்லாம் மக்கள் உணருமாறு செய்வதற்கும் உண்மை இறை நெறியை மக்களுக்குப் புகட்டுவதற்கும் எழுதப் பெற்ற நூலே திருக்குறளாம்.

திருக்குறளில் சில குறள்களில் புராண வரலாறுகள் கூறப் பட்டுள்ளனவென்றால், அது வள்ளுவரின் குற்றமன்று. மக்கள் உள்ளங்களின் போக்கை ஒட்டிச் சில கருத்துக் களைக் கூறவிட்டால் நூல் நிலைத்திருக்காது என்பது அவரது எண்ணமாக இருந்திருக்கலாம். புராண வரலாறு வருகிறது என்பதற்காக ஒரு குறளுக்குப் புதிய பொருள் காணலாகாது. சான்றாக,

> ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
>
> இந்திரனே சாலுங் கரி

என்ற குறளில் "இந்திரனே சாலுங்கரி" என்ற சொற் றொடருக்குப் பரிமேலழகர் "தான் ஐந்தவியாது சாப மெய்தி நின்று அவித்தானது ஆற்றலுணர்த்தினானாகலின் "இந்திரனே சாலுங் கரி என்றார்" என்று அகலிகையின் கதையை நுழைக்கிறார் என்பதற்காக அதற்கு மதிப்புரை கூற வேண்டுமென்ற நோக்கத்தோடு "தேவர் தலைவனாகிய இந்திரன், தமிழர் பெருமை காண மனம் பொறாதவன்; வலிமையும், பெருமையும் உடைய தமிழ்ப் பெரியார்களை ஒழிப்பதையே தனது வாழ்க்கைப் பயனாகக் கொண்டவன்; வரையா ஈகையால் பெரும் புகழோடு வாழ்ந்த "மாவலி" என்ற தமிழரசனை "வாமனன்" என்பானைக் கொண்டு கொல்வித்தவன்" என்றெல்லாமா எழுதுவது? இவ்வாறு எழுதியவர் திராவிடக் கழகப் புலவர் ஒருவர். திருவள்ளுவர், ஒரு கட்சிக்காகவோ அன்றி ஒரு மதத்திற்காகவோ நூல் இயற்றவில்லை என்பது நினைவிலிருக்கத் தக்கது. உலகம் "வையம்" "நிலம்" என்றெல்லாம் பொதுமைச் சொற்களையே பெய்துள்ள வள்ளுவரா வடநாடு, தமிழ்

நாடு என்ற பாகுபாட்டைச் செய்வார்? மேற்கண்ட திராவிடக் கழகப் புலவர் திருக்குறளில் வரும் வானோர் விசும்புளார், தேவர், தெய்வம், புத்தேளிர், இமையார் புலவர் என்ற சொற்கள் வடநாட்டாரையும், வானகம், புத்தேழுலகம், புத்தேள் நாடு, தாமரைக் கண்ணான உலகு என்பவை நாட்டைக் குறிக்கும் சொற்கள் என்றே பொருள் கொள்ளுகின்றார். இவ்வாறெல்லாம் உரை எழுதத் தொடங்கினால் நூலின் பெருமை குன்றி விடும். அன்றியும் பரிமேலழகர் உரையிலுள்ள பொய்க் கதையை மறைப்பதற்கு வேறொரு பொய்க் கதையை நாம் உண்டாக்கினால் இந்த இரு பொய்க் கதைகளையும் மறுத்து மூன்றாவது பொய்க் கதை ஒன்று தோன்றி விடும்.

உடன்பாடில்லாத கொள்கைகள் உள்ள குறள்களை நீக்கி, மற்றவற்றைக் கையாளலாம். அவ்வாறு செய்தால் ஆயிரத்து முன்னூற்று முப்பது குறள்களில் ஒரு நூறு குறள்கள் குறையும் அவ்வளவே. அதனால் தீமை இல்லை. ஆனால் பொருந்தாத கருத்துக்களைப் புகுத்தினால் தீங்குகள் பெருகி விடும்.

உலகில் மக்கள் பிறந்து வாயைத் திறந்து அழத் தொடங்கும் போதே "அ" என்ற ஒலி தான் உண்டாகின்றது. அந்த "அ" என்ற ஒலியை அடிப்படையாகக் கொண்டே தான் மற்ற ஒலிகளும், மொழிகளும் தோன்றின. அதே போல் தான் உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் இயங்குவதற்குக் கண்களுக்குப் புலப் படாத ஒருவகை விசை இருக்கின்றது. அது உயிருள்ளன, இல்லன என்னும் பாகுபாடின்றி அனைத்திலும் கலந் துள்ளது. உலகம் வேறு, இறைவன் வேறு அன்று. உலக நிகழ்ச்சிகள் யாவும் இயற்கையாகிய இறைவனை ஒட்டியே

தான் நடைபெறுகின்றன. இயற்கையை நாம் வென்று விட்டோமென்ற இறுமாப்புக் கொள்ளுவதற்கு இடமில்லை. வான ஊர்தி கண்டு பிடிப்பதற்கு நமக்குத் துணை நின்றவை பறவைகளும், வான நிலையமே யாம். நாவாய்கள் கண்டுபிடிப்பதற்கு துணை செய்தன மீன் களும், திமிங்கிலம் முதலிய நீரில் வாழும் உயிர்கள். இன்று நம்மை நாமே அழித்துக் கொள்ளப் பயன்படும் அணுகுண்டு ஹைட்ரஜன் குண்டு முதலியனவும் இயற்கையே நமக்கு அளித்தன. ஒருக்கால் மனிதன் சாவை வெல்லும் பெற்றிமை அடைந்தாலும் அதுவும் இயற்கை அன்னையின் அருளால்தான் இயலும். இயற்கை உலகில் உள்ள உயிர்கள் ஒன்றுக்கொன்று துணைபுரியு மாறு அமைந்துள்ளன. மனிதனுக்குத் துணை புரிய சில விலங்குகளும், மரம் முதலியவைகளும் உள்ளன. மனிதன் ஆறறிவு பெற்றிருத்தற்குக் காரணம் தனக்குத் துணை நிற்கின்ற ஏனைய உயிர்களை அன்போடு பேணுவதற்கே ஆகும். இறைவழி பாட்டிற்கெனத் தனி ஆலயங்களைக் கட்டி பூசை முதலியன செய்தும் உயிர்கள் பால் அன்பற்றவர்களாக இருப்பின் அது பயனில்லை. ஆலயத்திற்குச் செல்லாதவனாயினும் பிற உயிர்களிடத்து அன்புடையவனே சிறந்த வழிபாடு நடத்துபவனாவான். இதைத் தான் வள்ளுவர்,

அகர முதல் எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு

என்றார்.

அஃதாவது எப்படி எழுத்துக்களுக்கெல்லாம் "அ" என்ற உயிரெழுத்து முதலாக உள்ளதோ அதே

போன்ற உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் அடிப்படையான விசை ஒன்றுள்ளது என்று விளக்குகின்றார்.

இதே தத்துவத்தைத்தான் பாரதநாட்டின் துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பின் வருமாறு கூறுகின்றார்:—

"God is with all creation. God is not an exception to the Nature of the emperical world but is its central illustration. The laws of Nature are the expressions of the Divine mind. The world exists by the sustaining presence and activity of God. Without this presence and activity the world will collapse into nothing. If God is the Soul of a universe He is the Soul of a doomed universe." (Some sentences taken from the book "The philosophy of Sarvepalli Radhakrishnan. Chapter I Fragements of a confession pages between 37 and 44)

மொழி பெயர்ப்பு:

"இறைவன் எல்லாப் படைப்புகளிலும் உள்ளான். இறைவன் இவ்வுலகிலுள்ள இயற்கையின் சட்டங்கட்கு மாறுபட்டவனல்லனாயினும் தலைமையானவன். இயற்கைச் சட்டங்களின் இயக்கமே இறைவனது உள்ளத்தைக் காட்டும். இறைவன் உண்மையாலும் இயக்குவிக்கும் ஆற்றலாலுந்தான் உலகம் நிலைத்துள்ளது. இந்த இறைமையும் இயக்கமும் இல்லாமல் போகும்

பொழுது உலகமும் ஒன்றும் இல்லாமல் அழிந்துபடும். இறைவன் உலகத்திற்குத் தலைவனானால், ஒரு அழிந்து போகின்ற உலகத்தின் தலைவனாவான்.''

தமிழ் நாட்டின் ஒப்புயர்வற்ற பெரியாராய் விளங்கி, அண்மையில் மறைந்த தமிழகத் தந்தை திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் '' இருளில் ஒளி '' என்ற குறள் வெண்பாக்களால் ஆகிய ஒரு சிறந்த நூலைத் தன் இறுதி நாட்களில் இயற்றினார். அதில் பின்வருமாறு கூறுகின்றார் :—

'' உள்ளமுரைக்கெட்டா உயர்பரமென்றஞ்சற்க
உள்ளுக சூழியற்கை உற்று ''

பரம்பொருள் இன்னது தான் என்று உள்ளத்தால் உணர்ந்து உரைக்கவில்லையே என்று அஞ்ச வேண்டிய தில்லை. இறைவனாகிய இயற்கை நம்மைச் சுற்றி உள்ளதை உற்று நோக்கி அதுதான் பரம்பொருள் என உணர்க என்பது அதன் பொருள்.

கல்வியினாலுண்டாகும் பயன் உலகின் இன்னல்களைப் போக்குவதேயாகும். இயற்கை என்றும் நல்லன வற்றையே செய்யாது. பெரும்புயல், பெருமழை, தீயினால் உண்டாகும் தொல்லைகள் முதலியன இயற்கை யால் விளையும் தீமைகள். இவற்றால் உயிர்களுக்கு விளையும் கேடுகள் அளவில. மனிதன் பெற்றுள்ள ஆறாவது அறிவின் பயன் கற்றறிதல் ஒன்றே மட்டும் அன்று உயிர்களுக்குண்டாகும் துன்பங்களை அகற்றுதலு மாம். கற்றவர்களுக்கு இயற்கையால் விளையும் நன்மை தீமைகள் நன்கு தெரியுமாதலால் இயற்கையால்

உண்டாகிய துன்பங்களைத் துடைக்கும் ஆற்றலும் வேண்டும். இயற்கையாகிய இறைவனது தாள்கள் படாத இடம் உலகில் ஏது? அவ்விறைவனின் தாள்களின் அடியிலேயுள்ள உயிர்களுக்கு அன்புப் பணியாற்றுவதே அவனது நல் தாள்களைத் தொழுதலாகும். "வாலறிவன்" என்றால் மெய்யுணர்வுடையவன் என்பது பொருள். உலகை இயக்குவிக்கின்ற மெய்யுணர்வுடைய விசைக்கு "வாலறிவன்" என்ற ஆண்பால் பெயரிட்டார். உலகின் துன்பங்களுக்கு இரங்காதவர் கற்றவராயினும் புல்லறிவுடையரேயாவர்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்

நமது நெஞ்சம் ஒரு தாமரை மலரைப் போன்றது. தாமரை இலையின் மேல் எப்படி நீர் நிலைத்து நில்லாதோ அதே போல் நம் நெஞ்சிலும் எண்ணங்கள் நிலைப்பதில்லை. மனதைக் கட்டுப்படுத்தி எப்பொழுதும் நல்ல எண்ணங்களோடு வாழ்வது தான் இறை நெறியில் வாழ்வதாகும். அவர்கள் தான் நிலத்தின் மேல் நீண்ட நாள் புகழோடு வாழ்வார்கள்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

பாவம், புண்ணியம் என்பவை நமது பிறவியைப் பொறுத்ததல்ல. நமது மனத்தில் நல்ல எண்ணங்களை எண்ணுவதும் நற்செய்கைகளைச் செய்வதுமே புண்ணியம் எனப்படும், தீமை செய்வது தான் பாபம். இறைவனின் தன்மை அறிந்தோருக்கு பாபம், புண்ணியம் இரண்டும் இல்லை.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

உலகிலுள்ள எப்பொருளுக்கும் உவமையாகக் கூற முடியாத ஆற்றலுள்ளவன் இறைவன். குருடு, செவிடு, ஊமை, நொண்டி முதலிய பிறவிகளும், உயிர்களுக்கு ஏற்படுகின்ற சில ஊறுபாடுகளும் நமக்குத் தெரியாத ஒருவகை இயற்கையின் கோளாறு. அவைகளை எல்லாம் நம்மால் இயன்றவரை காப்பாற்ற வல்ல மனத் துணிவு வேண்டும். நெஞ்சில் இரக்க குணம் வேண்டும். அத்தகைய துணிவும், இரக்கமும் இல்லாதவர்களுக்கு இயற்கையாகிய இறைவனால் உண்டாகும் துன்பங்கள் கவலையைக் கொடுக்கும்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளையும் நன்னெறியில் செலுத்தும் பண்பு வேண்டும். அத்துடன் ஒழுக்க நெறியில் வாழும் பண்பும் வேண்டும். ஒழுக்கக் கேடு இயற்கைக்குப் பகை. அது ஆயுளைக் குறைத்து விடும். திருவள்ளுவர் அதனைக் கருதித்தான் "ஒழுக்க முடைமை" என்ற அதிகாரம் இயற்றினார். "நீத்தார் பெருமை" என்ற அதிகாரத்திலும்,

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு

என்றார். அதாவது ஒழுக்க நெறியில் வாழ்வோரை உலகிலுள்ள எல்லா நூல்களும் போற்றும் என்றவாறு. இதே கருத்தைத்தான் வேறு இடத்தில் வலியுறுத்துகிறார்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

என்ற குறளில் கூறினர்.

இயற்கையாகிய இறைவன் அறக் கடல். நன்மை, தீமை இரண்டினையும் இணைபாக அளிக்கும் ஆற்றலுள்ள வன். அந்தந்த நன்மை, தீமைகளை நன்குணர்ந்து நாம் நடந்து கொள்வோமாயின் தொல்லைகள் நம்மை அணுகா. அதன்றி வேறுவகைகளில் நடந்தால் இயற்கை நம்மைத் தீராத தொல்லைக் கடலில் ஆழ்த்தி விடும்.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது

எண்ணிப் பார்க்கத்தக்க குணங்களை உடைய இயற்கை யாகிய இறைவனை மனத்தால் எண்ணாமலும், வாயால் வாழ்த்தாமலும், தலை குனிந்து வணங்காமலும் இருப் போமானால், ஆறறிவையும், மற்ற ஐம்பொறிகளையும் பெற்றதால் பயனில்லை.

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

இறைவனுக்கு மக்கள் தேங்காய், பழம் முதலியன வைத்துப் பூசையிட வேண்டும் என்ற அவாவும் இல்லை. அவ்வாறு செய்யாதவர்களைத் தண்டிக்கவும் மாட்டார். ஆனால் இயற்கை இறைவனோடு ஒன்றறக்கலந்து வாழ் வோர்க்கு எஞ்ஞான்றும் துன்பமில்லை.

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல**

பிறவி என்பது ஒரு பெருங்கடல். இன்பமும், துன்பமும் மாறி மாறி வந்து கொண்டே இருக்கும். இயற்கையை ஒட்டி நம் வாழ்வைச் சீர்படுத்திக் கொண்டால் இன்பம், துன்பமாகிய கடல்களை எளிதில் கடக்கலாம். அவ்வாறு இல்லையானால் அக்கடல்கள் நம்மை விழுங்கிவிடும்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவ னடிசேரா தார்**

# வெகுளாமை

தமிழிற் றோன்றிய இலக்கியங்களிலெல்லாம் முதன்மையாக மதிப்பெண்ணைப் பெறுவதும் எக்காலத்தும் போற்றப்படுவதாகிய நூல் திருக்குறள் ஒன்றேயாம். மக்கள் உலகில் வாழ வேண்டிய நெறிகளினின்றும் வழுவாது வாழுதற்குரிய வழி காட்டும் நூல் திருக்குறளே.

அப்பெற்றிமை வாய்ந்த குறளின் கண் அமைந்துள்ள "வெகுளாமை" என்ற அதிகாரத்தைச் சிறிது ஆராய்வோம்.

வெகுளாமை என்ற சொல் சினவாமை அல்லது கோபிக்காமை என்ற பொருளதாகும். மனிதனுக்கு இயற்கையாக அமைந்துள்ள குணங்களுள் சினம் அல்லது கோபம் ஒன்று. சினம் உண்டாகும் பொழுது மனிதனது தன்மையே மாறிவிடும். சினத்தால், தான் செய்கின்ற வேலை எத்தகையது என்பதை மனிதன் உணராமல் இருந்து விடுகிறான்.

சினத்தால் ஒரொருக்கால் கொலைத் தொழிலையும் அஞ்சாமல் செய்து விட்டு பின்னர் வருந்த நேரிடுகிறது. அதனால் எத்துணை நற்பண்புகள் வாய்ந்த மனிதனையினும் சினம் அவனைத் தீயவனாக்கி விடுகிறது. அத்தோடு மில்லாமல் சினம் மனிதனது உடல் நிலைக்கும் ஊறு

உண்டாக்குகிறது, சினம் ஏற்படும் பொழுது உடலில் இரத்தக் கொதிப்பை உண்டாக்கி, சில நேரங்களில் உயிருக்கே இறுதி விளைவிக்கும்.

சினம் பிறரது வெறுப்பையும், பகையையும் உண்டாக்கும். பொதுவாக எவரிடத்தும் சினந்து கொள்ளாமலிருத்தலே சாலச் சிறந்தது.

பிறர் மாட்டு சினம் உண்டாகக் காரணம் இருப்பினும், அவர்களிடத்து சினம் கொள்ளாமல் காத்துக் கொள்வதற்குரிய காரணங்களைத் திருவள்ளுவர் வெகுளாமை என்ற அதிகாரத்தில் அறிவுறுத்துகின்றார்.

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்
அல்லிடத்துக் காக்கினென் காவாக்காலென்

என்பது முதல் குறள்.

அதாவது தனது சினம் பலிக்கக் கூடிய இடத்தில் சினம் உண்டாகாமல் காப்பவனே வல்லவன். அதன்றி சினம் பலிக்காத இடத்தில் அதனைத் தடுத்தாலும் தடுக்காவிட்டாலும பலனில்லை என்பது அதன் பொருள்.

மதித்திருப்பாரு மிறக்க மதியா
மதித்திருப்பாரு மிறக்க—மிதித்தேறி
ஈயுந் தலைமே லிருத்தலா லஃத்றிவார்
காயும் கதமின்மை நன்று

என வரும் நாலடியாரிலுள்ள செய்யுள் ஒப்பு நோக்கத் தக்கது.

தன்னிலும் தாழ்ந்தவர்பால் உண்டாகும் சினத்தைக் காப்பவனே மனிதத் தன்மை வாய்ந்தவன். எப்படி எனின் தாழ் நிலையில் உள்ளவன் நம்மை இகழ்ந்தாலும் நாம் அவனிடத்து அன்பு காட்டி நல்லறிவு புகட்டுவோமானல், அவனும் நம்மிடத்து நன்றி உள்ளவனுக இருப்பான். அதனை விடுத்து நாம் அவனுக்கு இடையூறு விளைவிப்போமானல் அது நமக்கு இழிந்த பெயரை உண்டாக்கும். நமக்குத் தாழ்நிலையில் உள்ளவன் நம்மை இகழ்வானுனல் அவன் வியக்கும்படியான நற்செய்கைகளைச் செய்ய வேண்டுமேயன்றி அவன் மீது சினங் கொள்ளலாகாது. நம்மினும் மேல் நிலையிலுள்ளவர்கள் நமக்குத் தீங்கு விளைவித்தாலும் நாம் அவர்களிடத்து சினங்கொண்டு பயனில்லை. அவர்களது வலிமை நமது வெகுளியை வென்று விடும்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

என்று பொறையுடைமை என்ற அதிகாரத்தினும் வள்ளுவர் கூறுகிறுர்.

ஒருவனுக்குச் சினமானது தன்னிலும் வலியவர் மீது உண்டானுல் அது தனக்கே தீமையாகும். தன்னின் மெலியவர் மீது உண்டானுல் பழியை உண்டாக்கும். ஆதலின் சினத்தலினும் கேடு இல்லை என்பர்.

செல்லா இடத்தும் சினம் தீது செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற...

என்ருர்.

தம்மினும் வலியார்மேல் உண்டாகும் சினத்தால் தம்முடைய உயிருக்கோ அன்றிப் பொருளுக்கு ஏத முண்டாகும். தம்மினும் மெலியார் மேல் வெகுண்டு அவர்களுக்குத் தொல்லை அளிப்பார்களானல் தமது பெயருக்கு இழுக்கு நேர்வதன்றி, பெருங்குற்றம் இழைத்தவர்கள் ஆவார்கள்.

மறத்தல் வெகுளியை யார் மாட்டும் தீய
பிறத்தல் அதனல் வரும்

என்றது தீயன எல்லாம் கோபம் காரணமாக வருமாத லால் கோபத்தை மறக்க வேண்டுமென அறிவுறுத்துவ தாம். இக்குறளோடு,

பிழைத்தல் பொறுத்தல் பெருமை, சிறுமை
இழைத்த தீங்கெண்ணி யிருத்தல்-இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று

என்ற சிறுபஞ்சமூலத்தில் உள்ள செய்யுளை ஒப்பிடலாம். அஃதாவது எவரொருவர் நமக்கு எத்தகைய தீங்கு விளைவித்தாலும் நாம் அவர்கள் மீது வெகுளாது அவர் களுக்கு நன்மை செய்தலே பெருமை தரும். அவர் செய்த தீங்கினை எண்ணி நாமும் தீங்கிழைப்பது சிறுமையாகும். ஒருவர் நமக்குப் பகைமை நினைந்து அறமல்லன செய்யி னும் அவர்களது பகையைப் பொருட்படுத்தாது வாழ்தல் வேண்டும் அங்ஙனமின்றி நாமும் அவர்மீது வெகுண் டெழுந்து பகையை மிகுதிப்படுத்திக் கொண்டால் அதனல் இருபாலாருக்கும் எவ்வகைப்பயனும் இல்லாமற் போகும், ஊராரின் நகைப்புக்கும் இடமாகும்.

சினமானது ஒருவனது முகத்தில் தோன்றுகின்ற மகிழ்ச்சியைப் போக்கிவிடும். அதனால் வாழ்வே பாழாகி விடும். சினந்திருக்கின்ற நேரத்திலே நண்பர்களும் பகைவர்களாகி விடுவார்கள். பொதுவாகச் சினம் மிகுந்துள்ள ஒருவருடைய வாழ்வில் மகிழ்ச்சியையே காண இயலாது. இதைத் தான்,

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற

என்று குறிப்பிட்டார் வள்ளுவர்.

உள்ளம் கவர்ந்தெழுந்தோங்கும் சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பெயர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு

என்ற நன்னெறிச் செய்யுளை இங்கு மேற்கோளாகக் கூறலாம்.

சினம் ஏற்படுவதால் ஒருவனது மன நிலைக்கும், உடல் நிலைக்கும் பெரிதும் ஊறு விளைகின்றது. திடுமெனப் பொங்கி எழுகின்ற சினத்தால் உடலில் இரத்த ஓட்டம் மிகுகின்றது. சில நேரங்களில் மாரடைப்பால் இறப்பும் ஏற்படும். அதன்றியும் நாம் பிறர்மேல் சினம் கொள்ளும் போது நம்மை அறியாமல் கொடுஞ்சொற்கள் நம் வாயினின்று வெளிவரும். அக்கொடுஞ் சொற்களால் வெகுண்ட மற்றவர் நம்மைத் தாக்குதலும் கூடும். அதனால் நமது உயிருக்கே இறுதி நேரிடும். ஒருவன் துன்பம் வாராமல் தன்னைக் காக்க வேண்டுமானால் தனக்குக் கோபம் வாராமல் காக்க வேண்டும். காவாது

போனுல் அக்கோபம் அவனையே கெடுக்கும் என்ற பொருளில்,

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்

என்ருர். இக்கருத்தமைந்த பழமொழி நானூற்றிலுள்ள செய்யுளைக் கேளுங்கள்.

ஆருச் சினத்தன் அறிவிலன் மற்றவனை
மாறி ஒழுகல் தலை என்ப — ஏறி
வளியால் திரையுலாம் வாங்கு நீர்ச்சேர்ப்ப
தெளியானைத் தேறல் அரிது,

ஒரு வீடு எதிர்பாரா வகையில் தீப் பற்றுமானல் அவ்வீட்டளவில் நில்லாது சுற்றுப்புறங்களில் எல்லாம் பரவிவிடும். அதைப் போல மனிதனுக்குச் சினம் ஏற்பட்டால் அச்சினமானது அம்மனிதனேடு நில்லாமல் அவனது இனத்தாரையும் கெடுத்து பகைமையை உண்டாக்கி விடும். சினம் என்னும் நெருப்பு சினம் கொண்டவனை மட்டுமல்லாமல் அவனுக்குப் பாதுகாவலாயுள்ள சுற்றத்தினரையும் சுடும் என்றவாறு,

சினம்என்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமாப் புணையைச் சுடும்

என்ருர். இக்கருத்தினை எண்ணியே கம்பரும்.

ஆற்ருன் பகர்வான் பிறுமைய வீவ்வையமையல்
தோன்ரு நெறிவாழ் துணைத் தம்பியைப் போர்
தொலைத்தோ

சான்றோர் புகழும் தனித்தாதையை வாகை
கொண்டோ
ஈன்றாளை வென்றோ வினியிக்கதந் தீன்வதென்றன

என்றார் இங்கு இலக்குமணனுக்கு ஏற்பட்ட சினத்தை, சேர்ந்தாரைக் கொல்லும் சினமாகச் சொல்லப்பட்டிருத்தல் உணரத்தக்கது.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று

என்ற குறளால் வெகுண்டவனுக்கு அவனது வெகுளியால் கேடு உண்டாகும் என்று கூறுகின்றார். அது எங்ஙனமெனின் ஒருவனுக்கு வலிமை இருக்கின்றது என்பதனைக் காட்டுவதற்காக தனது கையை ஓங்கி நிலத்திலறைந்தால் எவ்வாறு கை வலியுண்டாதல் தவறாதோ அதைப் போல, ஒருவன் தனக்குள்ள வலிமையைக் காட்ட பிறர்மேல் சினம் கொள்வானானல் பிறரால் அவனுக்கு இடுக்கண் நேருவது தவிர்க்க முடியாதது. நமக்கு ஒருவன் கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் தோய்த்தாற் போன்ற துன்பங்கள் செய்திருந்தாலும் அவன் நட்புக் கொண்டால் நாம் அவன் மீது வெகுளலாகாது. என்பர்,

இணரெரிதோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று—என்றார்.
செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்,

என்று "இன்னா செய்யாமை" என்ற அதிகாரத்திலும் கூறினர்.

ஒருவனுக்குக் கோபம் இல்லையானல் அவன் எண்ணியவெல்லாம் கைகூடும். எங்ஙனம் எனின் கோபம் இல்லாதவனிடத்து எல்லாரும் அன்புடையவராய் இருப்பர், அவனுக்கு எவ்விதமான இடர்ப்பாட்டினையும் விளைவிக்க எவரும் நினையார்.

அவன் தொடங்கும் வேலைகளிலெல்லாம் வெற்றியே கிட்டும்.

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்

என்பது வள்ளுவர் வாக்கு. இங்கு......

கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றி னுழைந்து

என்னும் அடக்கமுடைமை என்ற அதிகாரத்திலுள்ள குறளையும் ஒப்பிடலாம்.

இறுதியாக,

இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. —என்றார்.

அஃதாவது கோபம் மிக்கவர் உயிர் உடையவராயினும் செத்தாரோடு ஒப்பர். கோபத்தைக் கைவிட்டவர் சாதலை ஒழித்த பெரியாரை ஒப்பர் என்பதாம்.

திருக்குறள் காட்டும் நெறிதான் இயேசுவும், புத்தரும், மகாத்மா காந்தியடிகளும் மேற்கொண்டிருந்த வாழ்க்கை.

கிருஸ்து ஏற்படுத்திய மதம் கிருஸ்துவம் என்றும், புத்தன் கண்ட உண்மைகள் பௌத்தம் என்றும் முகம் மது நபியின் உபதேசங்கள் இஸ்லாம் என்றும் காந்தியடிகள் கற்பித்தவை காந்தியம் எனவும் அழைக்கப்படுதல் போல திருக்குறளையும் திருவள்ளுவம் என்றே கூறலாம்.

திருக்குறளை மேடைப் பேச்சளவில் மேற்கோள் நூலாகப் பயன் படுத்தல் ஆகாது.

ஒவ்வொருவரும் அதனை நன்கு கற்று வாழ்க்கை நூலாகவே கொண்டு வாழ்தல் தான் நாட்டு மக்களது வாழ்வு உயரும்.

வாழ்க திருவள்ளுவம். வாழ்க தமிழ்.

# சான்றாண்மை

தெய்வப் புலவர் திருவள்ளுவனார் அருளிச் செய்த திருக்குறளில் 99-ம் அதிகாரமாகச் சான்றாண்மை உள்ளது.

சால்பு என்பதற்கு நிறைவு என்பது பொருள். பல நிறைந்த குணங்களை ஆளும் தன்மை சான்றாண்மை எனப்படும். சான்றோர் என்போர் பல நல்ல குணங்களால் நிறைந்தோர். 'சால்' என்பதனை 'நிறைவு' என்னும் பொருளில் தெலுங்கர் சொல்லுவர்.

சான்றாண்மை என்னும் அதிகாரம் குடிமை, மானம் பெருமை என்னும் அதிகாரங்களுக்குப் பின்னும் பண்புடைமை என்னும் அதிகாரத்திற்கு முன்னும் வைக்கப்பட்டுள்ளது. சான்றோரின் குணங்கள் இங்கு குறிப்பிட்ட நான்கு அதிகாரங்களிலும் அடங்காமையால் சான்றாண்மை என்னும் தனி அதிகாரமாக வைத்தார்.

ஆசிரியர் பரிமேலழகரும் "பெருமையுளடங்காத குணங்கள் பலவற்றையும் தொகுத்துக் கொண்டு நிற்றலின் இஃததன் பின் வைக்கப்பட்டுள்ளது" என்று வரைந்துள்ளார்.

'பண்புடைமை' என்னும் பின்னருள்ள அதிகாரமும் சான்றோரின் எஞ்சிய குணங்களைக் கூறுவதாகும். எனவே சான்றாண்மை என்பது இவ்வைந்து அதிகாரங்களின் ஐம்பது குறள்களின் உட்பொருளுள்ளதாகும். ஆகவே அவ்வதிகாரங்களின் பொருளை விரிவாக ஆராயாது சான்றாண்மை என்பதனையே கவனிப்போம்.

"சான்றாண்மை" என்பதின் அமைப்பு முறையை ஆசிரியர் பரிமேலழகர் அமைப்புப்படியே காணின் முதல் மூன்று குறள்கள் சான்றோரின் குணங்களைப் பற்றியும், 4-வது சான்றோருடைய உரைகளைப் பற்றியும், 5, 6, 7, சான்றோருடைய செயல்களைப் பற்றியும், 8, 9, அவர்களது தன்மையைப் பற்றியும், 10 சான்றோரின் பெருமையைப் பற்றியும் கூறுகின்றன.

உலகத்தில் மக்களாகத் தோன்றியவர் பல தொழில்களைச் செய்ய பல குணங்களை மேற்கொண்டிருக்கின்றனர். அவற்றுள் தனக்கென்று செய்வதும் பிறர்க்கென்று செய்வதும் தனக்கென்னும் பற்றின்றிச் செய்வதும் என்பனவாம். எனினும் தனக்கென்னும் பற்றில்லாமல் செய்யும் கடமையை "கடன்" என்பதே தெய்வப் புலவர் திருவுள்ளமாகும்.

தனக்கென்று பற்றுதலின்றி பிறர் நலனுக்காகச் செய்யும் எல்லா குணங்களும் கடமையை அறிந்து செய்யும் சான்றோர்க்கே உரியனவாகும்.

இதைத் தான்,

கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள்ப வர்க்கு

என்று முதற் குறளில் கூறினர்.

மக்களாய்ப் பிறந்தவர்க்கு இரு நலங்கள் உள்ளன. ஒன்று உள்ளத்தின் நலம். உள்ளத்தின் நலம் மனத்தின் கண் அமைந்த நல்ல குணங்களாகும். புறத்தின் நலன்கள் இருவகைப்படும். உடலின் கண்ணுள்ள உறுப்புக்கள் ஒன்று. மற்றொன்று வீடு, வயல், தோட்டம், செல்வம் முதலிய நலன்கள். இவ்விருவகை நலன்களிலும் மனம் பண்பட்டு உண்டாகும் நல்ல குணங்களே தெய்வப் புலவர் சிறந்த நலமெனக் கொள்ளுகிறார். சான்றோரின் நலங்களெல்லாம் குண நலங்களே என்பதும், பிறபுறத்து நலன்கள் அன்று என்பதை விளக்குவான் வேண்டி

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉ அன்று

என அருளிச் செய்தனர்.

மூடவாரயும், குருடாரயும் இருந்த இரட்டைப் புலவர் குண நலத்தாற் பெருமை பெற்றனரேயன்றி பிற புற உறுப்புக்களால் பெருமை அடைந்தாரில்லை. சங்க காலத்தில் முடவராய் இருந்த பெரும் புலவர் இருவர் வணிச்சேரி முடமோசியார், ஐயூர் முடவனார் என அழைக்கப் பட்டனர். பிறரைத் தெளிவு படுத்துவதற்கு,

குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வியழகே யழகு

எனும் பாடல் நாலடியாரில் நலமுற எழுந்ததாகும்.

திருவள்ளுவனார் தமது கொள்கையைத் தொகுத்தும் வெளியிடுவார், வகுத்தும் வெளியிடுவார். அவ்வாறு வெளியிடுங்கால் ஒன்றுக்கொன்று அரண் செய்வதாகும்; அன்றி ஒன்றையொன்று விளக்குவதாகும். அவ்வாறு உரைத்த பலவற்றுள் ஒன்றைக் காண்மின்,

"இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை"

என்ற குறளில் மூவர் எனத் தொகுத்துச் சொன்னதை,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என மூவர் யார் யாரென வகுத்துக் கூறினர். அவ்வாறே அன்புடைமை, நாணுடைமை, ஒப்புரவறிதல், கண்ணோட்டம், வாய்மை என 50 பாடல்களில் வகுத்துச் சொன்னதை ஒரே குறளில் தொகுத்துச் சொல்லுகிறார்.

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம்
வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண்"

என்ற குறள் பொன்னே போல் போற்றத் தக்கது. சால்பு என்னும் தண் தமிழ் மண்டபத்தை மேற்கூறிய ஐந்து தூண்களே தாங்க வல்லன.

எம்மொழியிலும் எல்லாப் புலவர்களும் உவமை சொல்லுவார்கள். உவமானமாகச் சொல்ல வேண்டியவை இவையிவை என உவமான சங்கிரகம் ரத்தினச் சுருக்கம் முதலிய நூல்கள் கூறும். அன்று முதல் இன்றளவும்

உள்ள புலவர் யாவரும் படித்ததாகவே சொல்லி வருகின்றனர். தாமரை போன்ற முகம் என்பதில் தாமரை உபமானம், முகம் உபமேயம். இவ்வாறு உபமான உபமேயங்களைச் சொல்லுவதுதான் பெரும்பாலான புலவர் வழக்கம். இதில் உபமானம் தாமரை மான் முதலிய பொருள்களாகவே இருக்கும். ஆனால் திருவள்ளுவனார் சொல்லும் உபமானங்களோ தனிச் சிறப்புடையன.

பொருள் உபமானம் அன்று. பொருளுடைய உபமானம். அத்தகைய பல உள. அவற்றுள் ஒன்று, நவில் தொறும் நூல்நயம் போலும் பயில் தொறும் பண்புடையாளர் தொடர்பு. இது பொருள் உபமானம் அன்று. ஏறக்குறைவு இல்லாமல் இணை எடையுள்ளதாக உபமான உபமேயங்களாகும். அத்தகைய திருக்குறளைக் காண்போம்.

"கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு"

என்பதாகும். இதினால் நோன்பு என்பதற்கு எத்தனையோ பொருள்களும் சடங்குகளும் நடக்கின்றன. அவை ஒன்றையும் திருவள்ளுவர் குறிப்பிடவில்லை. ஒரே மூன்று மொழிச் சொற்றொடரால் 'கொல்லா நலத்தது நோன்பு' என்றார்.

ஒரு கருமத்தைச் செய்து முடிப்பாரது ஆற்றலாவது அதற்குத் துணையானாரைத் தாழ்ந்து கட்டிக் கொள்ளுதல். இவ்வாறு கட்டிக் கொள்ளும் துணிபு உடையவர் யாரென்றால் சான்றோரேயாவர். ஏன்? தாழ்ந்த

அவரைக் கட்டிக் கொள்ள வேண்டுமெனில் பணிவு என்னும் பண்பே தன் பகைவரின் பகைமையை ஒழிக்கும் படை என்பதாகும். இதனால் பகைவரை ஒழிப்பதற்குப் படைகள் வேண்டுவதில்லை. போர்கள் வேண்டுவதில்லை. சான்றோரின் பணிவே பகைவரை மாற்றிவிடும் என்பது. இக்கருத்தை உட்கொண்ட குறள்,

"ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை"

என்பதாம்.

இத்தகைய பணிவு யாவருக்கும் இருக்காது சான்றோருக்குத்தான் இருக்க முடியும்.

சால்பு என்பது அன்பு, நாண் ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை முதலிய பல நல்ல குணங்களைக் கொண்டிருத்தல். இக்குணங்கள் உடையவர்கள் சான்றோர். குணங்கள் என்பன கண்ணால் காண முடியாத அறிவுப் பொருள். குணங்களை உடையது குணி பண்பையுடையது பண்பி. வெள்ளை ஒரு நிறமான குணம். வெள்ளை நிறத்தை யுடையது வெள்ளி. திருவள்ளுவனாரும் "அழுக்காறு என ஒரு பாவி" என 168-வது குறளில் கூறினார். அதற்கு ஆசிரியர் பரிமேலழகர் "பண்பிற்குப் பண்பில்லையேனும் தன்னையாக்கினானை இருமையும் கெடுத்தற் கொடுமை பற்றி அழுக்காற்றினைப் பாவி யென்றார்." அது ஏனெனின் "கொடியானைப் பாவி யென்னும் வழக்குண்மையின்" என்றார்.

இதனால் ஒரு குணமுடைய பொருள் மேல் வைத்துக் கூறுவது ஆசிரியர்கட்கு உடன்பாடாகும். எனவே

சால்பு என்னும் பண்புகள் நிறைந்த பண்பி சான்றோ ராவர்.

அச்சான்றோர்க்கு சால்புப் பண்புகள் நிறைந் துள்ளனவா என்பதையறிவதற்குத் தெய்வப் புலவர் ஓர் வழி காட்டுகிறார். "சால்புக்குக் கட்டளை யாதெனின் தோல்வி துணையல்லார் கண்ணும் கொளல்" என்பதாம். கட்டளை என்பது உரைகல். சால்பாகிய பொன்னின் அளவை அறிதற்கு உரைகல்லாகிய செயல் யாதெனின் தனக்கு இணை இல்லாதவரிடம் கொள்ளும் தோல்வி என்பதாகும். இதனால் சான்றோரின் நிறைந்த பண்பு களில் தோல்வியும் ஒன்று என்று தெளிந்து சொல்ல வல்லவர் திருவள்ளுவனார் அன்றி மற்றப் புலவர் யாருளர்?

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் அறையப் பட்டுக் கீழே விழுந்தனர். மூர்ச்சை தெளிந்ததும் அடித் தவர் மேல் வழக்குத் தொடரலாமா? என்று கேட்ட போழ்து வழக்குத் தொடருதல் தம் கொள்கைக்கு மாறு பட்டது என்று உரைத்தார். மகாத்மா காந்தியின் வாழ் வாம் இலக்கியத்திற்கு இலக்கணமாக நின்ற திருக்குறள்.

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்பதாம்.

இத் திருக்குறளின் பொருளமைப்பை நன்கறிந்த புலவர் ஒருவர்,

தம்மை யிகழ்ந்தமை தாம் பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை

எரிவாய் நிரயகத்து வீழ்வார்கொலென்று
பரிவதூஉம் சான்றோர் கடன்.

என வரும் நாலடியாரில் காண்க.

சால்பு என்னும் திண்மையுள்ளவர்கள் இழிவாக எண்ணப்பட மாட்டார்கள். ஏன்? சால்பு என்பது திண்மை. உறுதி' திண்மையும் உறுதியுமுள்ள சான்றோர்க்கு இன்மை இழிவு செய்யாது. இன்மையும் பெருமையாகவே இருக்கும். இதனை

"இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"

என்றார்.

ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்

என்பது 9-ம் குறள்.

இதில் சான்றோர்கள் எத்துணைத் தொல்லைக்கு ஆளாயினும் தமது குணங்களில் மாறுபட மாட்டார்கள் என்னும் கருத்தைக் கூறுவது. சேரமான் கணைக்காலிரும்பொறை என்பான் தன் மானத் தமிழ் மன்னருள் தலையாயவன். அவன் எவருக்கும் அடிமைப்பட இசையாத பெருவாழ்வு வாழ்ந்தவன். அவன் ஒருக்கால் சேரநாட்டு மன்னனுக்குத் தோற்றுச் சிறைப்பட நேர்ந்தது. அவ்வாறு நேர்ந்தும் தன் மானத்தை விட்டுக் கொடாதவனாய் சிறையில் உணவும், நீருமின்றியே வாழ்ந்தான். ஒரு நாள் தாகம் மிகுதியாக, சிறைக் காவலனை நீர் கேட்க, அக் காவலன் அரசனைப் பலவாறு இகழ்ந்து காலம் கடத்தி

நீர் கொண்டு வந்தான். அது கண்டு பொருத அம்மன்ன வன் எவருக்கும் அடிமைப்படாத தான் அடிமைப்பட்டு ஒரு சிறைக் காவலனால் இகழப்பட்டதை எண்ணி வருந்தி அந்நீரைக் குடிக்காமலேயே வீழ்ந்து இறந்தான். இது வன்றோ சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவாரின் செய்கை? அப்பெருந்தகை பாடிய பாடல் புறநானூற்றில் உள்ளது.

குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினு
மாளன் றென்று வாயிற்றப்பார்
தொடர்படு ஞமலியினிடர் படுத்திரீஇய
கேளல் கேளிர் வேளான் சிறுபதம்
மதுகையின்றி வயிற்றுத்தீத்தணிய
தாமிரந் துண் ணுமளவை
யீன்மரோவில் வுலகந்தானே

என்பது அப்பாடல்

அமைதியைக் குலைக்கும் குணங்களுடைய மக்கள் நிலத்திற்குச் சுமையாவார்கள். அம்மக்களை நல்வழிப் படுத்துவோர் சான்றோராவர். அச்சான்றோரின் சான்றாண்மை என்றும் குறைவதில்லை. சான்றாண்மைக் குணங்களுள்ள சான்றோர் அக்குணங்களில் குன்றுவாராயின் நிலத்து மக்களுள் குழப்பம், போர் உண்டாகும். இதை வள்ளுவர்,

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை

என்றார்.

தம்மிடமடைந்த சான்றாண்மைக் குணங்களால் உலகத்தில் குழப்பமும், போரும் இல்லாமல் அமைதி நிலவுவதற்காக முயன்ற, முயலும், முயலப் போகும் சான்றோர் என்றும் வாழ்க!

## வாழ்க வள்ளுவம்

# திருவள்ளுவர்தம் ஊழ்க்கொள்கை

திருவள்ளுவர் தம் ஊழ்க்கொள்கை யாதென அறியுமுன் ஊழ் என்பதென்னை என அறிதல் வேண்டும். ஊழ் என்பது ஒரு பிறவியில் செய்த நன்மை அல்லது தீமை மறு பிறவியில் வந்தெய்துவதென ஒரு சாரார் கூறுப.

வள்ளுவர் மறு பிறப்பை ஒப்புக்கொள்பவரேயாயினும், ஊழ் என்பது சூழ்நிலை என்னும் பொருளில் தான் திருக்குறளில் கையாளப்பெற்றிருத்தல் கூடும். ஏனெனின் ஊழ் என்ற அதிகாரம் அறத்துப் பாலில் இறுதியாக வைக்கப் பெற்றுள்ளது. முந்தைய முப்பத்தேழு அதிகாரங்களில் உலகில் நடந்து கொள்ளத்தக்க முறைகளைக் கூறி, அவற்றின்படி நடந்தால் தீமை விளையாது எனக் கூறிய வள்ளுவர், அதனையும் மீறி ஒருக்கால் தீமை விளையுமானால் அது ஒரு மனிதனது சூழ்நிலையைப் பொறுத்தே இருக்குமென எண்ணினார். அச்சூழ்நிலையை வெல்லும் ஆற்றல் ஒரு சிலர்க்கே இருக்குமெனவுங் கருதினார். சூழ்நிலையாவது தான் செய்கின்ற செயல்களும் அதனால் விளையும் பயன்களுமேயாம். மனிதன் எண்ணுகின்ற எண்ணங்கள் சூழ்நிலை காரணமாக நன்மையாகவும் மாறும், தீமையாகவும் மாறும்.

ஒருவனது செல்வம் பெருகுதற்குரிய சூழ்நிலை உண்டாகும் போது செல்வத்தைத் தேடுகின்ற பெரு முயற்சியால் பெரும் செல்வத்தைத் தேடுகின்றான். அவனது கைப்பொருளை இழத்தற்குரிய சூழ்நிலை உண்டாகும் போது எத்துணை முயற்சி மேற்கொள்ளினும் பொருள் அவனை வந்தடையாது. பொருள் நிறையக் கையகத்துச் சேருங்கால் ஒருவற்குச் சோம்பல் தன்மை உண்டாகாது. பொருளை இழக்கின்ற போழ்து எவ்வகைத் தொழில்களையும் செய்கின்ற ஆற்றல் குறைந்தவனாய்ச் சோம்பல் தன்மையைப் பெற்று விடுகின்றான்.

**ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்**
**போகூழால் தோன்றும் மடி**

பெருஞ்செல்வமும், கல்வியும் உடையானொருவனாயினும் அவனது கட்புறவால் கெடுகின்ற சூழ்நிலை உண்டாகலாம். அதனால் கைப்பொருளனைத்தும் இழக்க நேரும். நல்ல நட்பும், அறிவுத் திறனும் உண்டாகக் கூடிய சூழ்நிலை ஏற்படும் போது பொருள் தானே வந்தடையும். தீய நட்பும், தீய பழக்க வழக்கங்களும் அறிவை மழுங்கச் செய்து பொருளையும் பறிக்கும். நற்பழக்க வழக்கங் களே செல்வத்தைப் பெருக்கும்.

**பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்**
**ஆகலூழ் உற்றக் கடை**

ஒருவன் மிகச் சிறந்த நூலறிவும், உலக அறிவும் வாய்ந்தவனாயினும், சேருகின்ற சேர்க்கையாலும், பழக்க வழக்கங்களாலும் அவனுக்குள்ள கூர்ந்த மதியை

இழக்க நேரும். செல்வன் வறிஞனாதல் அவனுக்குண்டா கின்ற தீய சூழ்நிலை. வறிஞன் அறிஞனாகவும், செல்வனாக வும் மாறுவது அவனது நற் சூழ்நிலை. கல்வியும், செல்வமும் ஒருங்கே பெற்றானாயினும் தீய சூழ்நிலையில் வாழ்ந்தானாயின் தீயோனாகவே மாறுகின்றான்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்

இவ்வுலகின் கண் அமைந்துள்ள இயற்கையாகிய சூழ்நிலை இரண்டு கூறுகளை உடையது. ஒன்று பொருள் தேடுதற்குரிய சூழ்நிலை. பொருள் தேடுகின்ற சூழ்நிலையில் உள்ளவனுக்கு உலகைப் பற்றிய அறிவு குறைந்தே இருக்கும். கல்வி அறிவும், உலக அறிவும் மிகுதியாக உள்ளவர்களுக்குப் பொருள் தேடுகின்ற சூழ்நிலை குறைந்தே இருக்கும். கல்வி அறிவும், உலக அறிவும் மிகுதியாக உள்ளவர்களுக்குப் பொருள் தேடுகின்ற சூழ்நிலை உண்டாவதில்லை. கல்வியும், செல்வமும் இணைந்துள்ள மக்கள் உலகில் மிகச் சிலரேயாவர்.

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு

ஒருவர்க்குச் செல்வத்தைச் சேர்க்கின்ற சூழ்நிலை ஏற்படும்போது, மிகத் தீங்கு விளைவிக்கின்ற செயலைச் செய்தாலும் அது அவனுக்கு நன்மையாகவே முடியும். செல்வத்தை இழக்கின்ற சூழ்நிலை ஏற்படும் பொழுது நன்மையை நாடிச் செய்கின்ற செயலும் தீயதாகி விடும்.

**நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்**
**நல்லவாம் செல்வம் செயற்கு**

சூழ்நிலை காரணமாக நம்மிடமுள்ள பொருள்களை எவ்வளவு காத்தாலும் அழிகின்ற நேரத்தில் அழிந்து போகும். இன்னொரு சூழ்நிலை நமக்கு ஆக்கம் தருவதாக இருக்கும் போது நாம் செலவழிக்க எண்ணினாலும் கூட வருவாய் பெருகுமேயன்றிக் குறையாது. சான்றாக, சென்ற உலகப் போரின் காரணத்தால் விலைவாசிகள் உயர்ந்து பலர் பொருள் சம்பாதித்ததும், இன்றுள்ள பொருளாதார நெருக்கடியால் பலர் துன்புறுதலையும் காண்க.

**பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்**
**சொரியினும் போகா தம**

பரிமேலழகர் தமது உரையில் "ஊழ், பால், முறை, உண்மை, தெய்தி, விதி, இயற்கை என்பன ஒரு பொருட் கிளவி" எனக் கூறுகின்றார். உலகத்தை இயக்குவிக்கின்ற இறைவன் ஒன்றுள்ளான். அவ்விறைவனின் செயலை மீறு வதற்கு எவராலும் இயலாது. பெருஞ்செல்வம் வாய்த்தோராயினும், அப்பெருஞ்செல்வத்தினை நுகரும் பேறு ஒரு சிலர்க்கே கிட்டும். பெருஞ்செல்வர் பலர் எல்லா வசதிகளும் பெற்றிருந்தும் மகிழ்ச்சியற்று வாழ்தலைக் காண்கின்றோம். அது இயற்கைச் சூழ்நிலை அவர்களுக்கு ஏற்றவாறு அமையாதது தான். பெருஞ் செல்வர் சிலர்க்கு தம் செல்வங்களை நுகர இயலா வண்ணம் உடல் நலக்கேடோ அன்றி வேறு இடர்ப்பாடு களோ வாழ்க்கையில் நேருகின்றன. கோடிக்கணக்கான

பொருள் பெற்றிருந்தாலும் இயற்கை அவர்களுக்குப் பகையாக வேலை செய்கிறது.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது

வறுமையால் வாட்டமடைகின்ற சூழ்நிலை ஒருவற்கு உண்டாகுமானல், அச்சூழ்நிலை அவனுக்குப் பிற தொல்லைகளை அளிக்காவிடின் துறவினை மேற்கொள்ளச் செய்யும். வறுமையால் வாடும் போது மனைவி, மக்களைக் காக்கும் பொறுப்பும் அவனுக்கு ஏற்படுமானல் அவன் பெரிதும் அவதியுற நேரும. ஆக வறுமைச் சூழ்நிலையில் உள்ளவனுக்குப் பல இடையூறுகள் வந்தடைவது இயற்கை.

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்

உலகில் இன்பமும், துன்பமும் கலந்தே இருக்கும். இன்பம் உண்டாகும் போது பெருமகிழ்ச்சி அடைதலும், துன்பம் நேருங்கால் வருந்துதலும் வேண்டா. இன்பத்தையும், துன்பத்தையும் இணையாக எண்ணுதல் வேண்டும்.

நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால்
அல்லற் படுவ தெவன்

சூழ்நிலையை வெல்லுகின்ற விசை வேறொன்றுமே இல்லை. நாமொன்று நினைக்கச் சூழ்நிலை மற்றொன்றாக மாறி விடும். எனவே மக்களது வாழ்வு சூழ்நிலையைப் பொறுத்தே இருக்கும்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்

இவ்வாறெல்லாம் கூறினாலும், முயற்சியால் ஒரொருக்கால் ஊழினை வெல்லுதல் கூடும் எனத் திருவள்ளுவர்,

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்

என்ற குறளில் கூறுகின்றார். அஃதாவது உழைப்பினால் ஊழையும் வெல்லும் திறம் பெறலாம் என்பது அதன் கருத்து.

"ஊழ்" என்பது ஒருவர் முன் பிறவியிற் செய்த அறமும், அறமல்லாதனவும் இப்பிறவியில் வந்தடைவது எனக் கொள்வது திருவள்ளுவர் கருத்துக்கு முரணான தாகும். பரிமேலழகரும், மணக்குடவரும் அவ்வாறு உரை எழுதவில்லை. பரிமேலழகர் "அஃதாவது இருவினைப் பயன் செய்தவனையே சென்று அடையும்" என்றே கூறுகின்றார். ஒருவன் செய்கின்ற நன்மை, தீமையாகிய இரு வினைகளும் செய்தபடியே செய்தவனையே சாரும் என்பது பொருள். இதில் அவர் பிறவிகளைப் பற்றி ஒரு குறிப்பும் எழுதவில்லை.

# பொய்யா மொழி

திருக்குறளுக்கு வழங்கும் பல பெயர்களுள் பொய்யாமொழி என்பது ஒன்று. திருவள்ளுவர் 2000 ஆண்டுகட்கு முன்னால் தமிழ் நாட்டில் பல ஊர்களில் சுற்றி அலைந்து பல துறைகளிலும் ஆராய்ந்து மக்களிடத்துக் காணப்படுகின்ற குறைபாடுகள் நீங்குவதற்கு பல உண்மைகளைக் கண்டார். அவ்வுண்மைகள் என்றென்றும் மக்கள் உள்ளங்களில் நிலைபெறுவதற்குத் திருக்குறள் என்ற நூல் வாயிலாக நமக்கு அளித்தார். மக்கள் இடையே கல்லாமை, அறிவின்மை, பொறாமை, சூது, வஞ்சனை, கயமை, கள் உண்ணல், களவு முதலியன என்றும் நிலைபெற்றிருக்கின்ற தீமைகள் ஆதலின் அவற்றால் விளைகின்ற தீமைகளை விளக்கி நல்வழிப் படுத்துதற்கு எழுந்த நூலே திருக்குறளாகும். மேற்கண்ட தீய குணங்களால் மக்களுக்கு விளையும் கேடுகள் இன்ன இன்ன என்பதும், அவற்றைக் களைகின்ற வழிகளும் கூறப்படுவதால் அந்நூல் பொய்யாமொழி என பெயர் வரலாயிற்று. இயேசு கிறிஸ்து, புத்தர், வள்ளுவர், சாக்கரட்டீஸ், காந்தியடிகள் போன்றோரின் கருத்துக்கள் ஒரு காலத்துக்கு மட்டுமல்லாமல் உலகம் உள்ளளவும் வாழத் தக்கன. இன்று திருக்குறளை கூட்டு நாடுகளின் பேரவை உலக நூலாக ஏற்றுக் கொண்டுள்ளது. என்றாலும் உலகிலுள்ள மக்கள் அதனை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்களா என்பது ஐயத்திற்கு உரியது.

சமூகத்தில் தீண்டாமை என்ற பெருநோய் பாரத நாட்டில் எவ்வளவு முயன்றாலும் போக்கப்படாததாக இன்னும் இருந்து வருவது வருத்தத்திற்கு உரியதாகும். பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுகின்ற மனப்பான்மை மக்களிடையே இருக்கும் வரையில் மதம், சமூகம், அரசியல் முதலியவை ஒருகாலும் முன்னேறாது என்பதனை வள்ளுவர் நன்கு உணர்ந்திருந்தார். பிறப்புக்களில் வேற்றுமை இல்லை எனவும் அவரவர் செய்கின்ற செயல்களின் வேறுபாடு உயர்வையும், தாழ்வையும் குறிக்கும் என்றும், கல்வி அறிவு மிக்கோரே மேற்பிறந்தார் எனவும், கல்லாதாரே கீழோர் எனவும், சிற்றினம் சேருகின்றவர்களே கீழ்மையானவர்கள் என்றும், மனத்தூய்மை உடையவர்களே மேலோர் எனவும் வள்ளுவர் இடையறாது அறிவுறுத்துகின்றார்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"
மேல்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.
"சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்."
மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்

என்ற குறள்கள் இந்த சாதி வேற்றுமை கடிவனவாகும்.

இன்று மதுவிலக்குத் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால் திருக்குறள் கற்றவர்களை பிரசாரத்திற்கு அரசாங்கம் நியமிக்க வேண்டும். மக்கள் மதுவை

வெறுப்பகற்குத் திருக்குறள் மிகச் சிறந்த மருந்தாகும். கள்ளுண்ணுமை என்று அதிகாரத்திற்குப் பெயரிட்டிருந்தாலும் அது பொதுவாக எல்லா மது வகைகளையும் குறிப்பதாகவே கொள்ளல் வேண்டும். திருவள்ளுவர் காலத்தில் பெரும்பாலும் தென்னை, பனை மரங்களினின்றும் இறக்குகின்ற கள்ளினையே மக்கள் உண்டு வந்ததால் அதனைக் கடிந்து எழுதிய அதிகாரத்திற்குக் கள்ளுண்ணுமை என்று பெயரிட்டார். பொதுவாக மது அருந்துவோர் பகைவரால் வஞ்சிக்கப்படுவர் என்பதும், சான்றோரால் கைவிடப்படுவர் என்பதும், மது அருந்துவோரைத் தாயும் விரும்ப மாட்டாள் என்பதும், நாணம் என்கின்ற ஒரு உயர்ந்த தன்மை அற்றுப் போய் மனிதன் விலங்காக மாறிவிடுவான் என்பதும், பொருளைக் கொடுத்து மதுவை வாங்கி உண்பவன் அறியாதவன் என்பதும், மது அருந்துபவன் உயிரோடு இருப்பினும் இறந்தவனுகக் கருதப்படுவான் என்பதும் திருவள்ளுவர் தம் சீரிய கருத்துக்களாம். இத்தகைய கருத்துக்களை இவ்வதிகாரத்தினை முற்றிலும் கற்றுணர்ந்தவர்கள் சிற்றூர்களிலெல்லாம் மக்களுக்கு விளக்கினுல் மது விலக்குச் சட்டத்தை மக்கள் மீறுவதற்கு வழி இருக்காது.

கல்வியின்மையை மக்களிடத்திலிருந்து நீக்குவதற்கும் அறியாமையைப் போக்குவதற்கும் திருக்குறள் ஒரு சிறந்த வழிகாட்டியாகும். எவ்வாறு கல்லாத மக்கள் விலங்கோடு சேருவார்கள் என்பதனை மக்களுக்கு நன்கு விளக்கி வறிஞர்களையும் அறிஞர் ஆக்குவதற்கு கற்றவர்கள் முன் வருதல் வேண்டும். கயமை என்பது மக்களிடையே ஒரு சிலரிடத்து உள்ள ஒரு குணமாகும்.

கயவர்கள் வாய்ப்பு நேரும் பொழுது நாட்டையும், தம் சுற்றத்தினரையும், உறவினரையும் காட்டிக் கொடுக்கத் தயங்கார். அத்தகைய கயவரிடத்து எஞ்ஞான்றும் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். அவர்கள் மக்களைப் போன்ற காட்சி உடையவர்கள் ஆயினும் அவர்கள் கூற்றினும் கொடியர். நல்ல வழிகளைக் காட்டுவது போல் தோன்றினும் மீளாத் துயரக் கடலில் ஆழ்த்துவர். அத்தகைய கயவர்களை சமூகமும் நாடும் வாழவிடலாகாது. நாட்டின் செல்வநிலை, படைவலிமை பிற மறைபொருள்களை அக்கயவர் பிறநாட்டினருக்கு அறிவிக்கின்ற ஒற்றர்களாக இருப்பர். அவர்களால் நாட்டிற்குக் கேடு விளைதல் ஒருதலை.

"அறைபறை யன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்"

திருவள்ளுவர் நெசவுத் தொழில் செய்தார் என்றும் சோதிடம் கூறினர் என்றும் கூறுவர். ஆனல் அவர்தம் திருக்குறளில் அவ்வாறு கூறுவதற்குரிய ஆதாரம் ஒன்றும் இல்லை. ஆனல் உழவு, மருந்து என்ற இரு அதிகாரங்கள் திருக்குறளில் உள்ளன. இதனல் அவர் உழவு, மருத்துவம் ஆகிய இருதொழில்களில் ஈடுபட்டோ அல்லது அததொழில்களைச் செய்பவர்களோடு தொடர்புடையவராகவோ இருந்திருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது. மருந்து என்ற அதிகாரத்தில் இன்ன நோய்க்கு இன்ன மருந்து என்று கூறவில்லையென்றாலும் மக்களுக்கு வராது இருக்கின்ற வகைகளையும், நோய் வந்தால் அதனை எவ்வாறு போக்குதல் வேண்டும் என்று மருத்துவனுக்கு வழியும் கூறுகின்றார். மக்கள் உண்ணு

கின்ற உணவு அவரவர் தம் உடல்நிலையை பொருத்து இருத்தல் வேண்டும். அவ்வாறு உடல்நிலை மீறி உண்ணுகின்ற உணவு தான் நோயை உண்டாக்குகின்றது. உடல் ஜீரணிக்கின்ற அளவு உண்ணுகின்றவனுக்கு மருந்து தேவையில்லை.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய(து)
அற்றது போற்றி யுணின்
அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு

மருத்துவர்கள் ஒரு நோயாளியின் நோய் இன்னது என்று அறிந்து அந்நோய்க்கு என்ன காரணம் என அறிந்து அந்நோயினைத் தணிக்கின்ற மருந்தினை பிறகு செய்தல் வேண்டும். ஒரு மருத்துவன் தான் மருத்துவம் செய்கின்ற நோயாளியின் வலிமை முதலியவற்றை அறிந்தும், நோயின் தன்மையை அறிந்தும் தான் மருத்துவம் செய்கின்ற காலத்தினையும் அறிந்து செய்தல் வேண்டும்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்
உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்

சூதாடல் மக்கள் இனத்தை அழிக்கின்ற பெரும் குற்றமாகும். அதனை நாட்டினின்று ஒழித்தால் தான் நாடு நலம் பெறும். மக்களிடத்தில் சோம்பல் தன்மையையும் கைப்பொருளை இழக்கின்ற சீர்கேட்டினையும் உண்டாக்குவது சூதே. சூது ஆடுதல் ஒருமீன் தூண்டியில்

உள்ள ஒரு பொருளைக் கௌவப் போய் தூண்டியில் விழுவதைப் போன்றதாகும். சூதாடுவோர் ஒரு ரூபாய் பெறுவாரேல் அவர் கல்வி, மானம், பொருள், புகழ், அறிவு முதலாய நூறு குணங்களை இழந்தோர் ஆவர். எனவே சூதாடுதல் மிக இழிந்த செயல் ஆகும்.

உலகிலுள்ள எல்லாத் தொழில்களிலும் சிறந்த தொழில் உழவுத் தொழிலே ஆகும். மனிதனுக்கு இன்றியமையாத உணவை அளிப்பவன் உழவனே யாவான். உழவன் நலிந்தானானால் உலகம் அழிந்து விடும். உழவர்களே தம் நண்பராச உடைய அரசர் பல வேந்தர்களது நிலம் முழுதையும் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வருவர். உழவர்கள் பிறரிடத்து இரந்து உண்ண மாட்டார்கள். ஆனால் இரப்பவர்களுக்குக் கொடுப்பார் கள் என்றெல்லாம் திருவள்ளுவர் கூறுகின்றார். ஆனால் இன்றைய உழவர்களின் நிலை பெரிதும் வருந்தத்தக்கதாக இருக்கின்றது. இயற்கையின் வஞ்சனையும் மக்களின் ஒத்துழைப்பு இன்மையும் உழவர்களைத் தங்கள் தொழிலில் நாட்டங் கொள்ளாமல் பிற தொழில்களை மேற்கொள்ளச் செய்கின்றது. காந்தியடிகள் உழவுத் தொழிலின் மேன்மையைப் பெரிதும் விளக்கினார். அவர்கள் தாம் நாட்டின் உயிர் என்றும் கூறியிருக்கின் றார். உழவுத் தொழில் நின்று போகுமானால் நாம் பிற நாடுகளை உண்ணும் உணவுக்கே எதிர் பார்க்க வேண்டிய தாய் இருக்கும்.

ஆக இத்தகைய சிறந்த கருத்துக்களையெல்லாம் கூறு கின்ற ஒரு நூல் எக்காலத்தும் பொய்யாமொழி என போற்றப்படுவதற்கு ஐயமுண்டோ! எனவே தான்

இக்கட்டுரைத் தொகுப்பு நூலுக்கும் "பொய்யாமொழி" எனப் பெயரிட்டேன். திருவள்ளுவர் தம் கருத்துக்கள் இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் உலகில் நிலைத்திருக்க வேண்டியன. மக்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டுவன. அதற்கு முடிவு காணப்பெறாத உரைகள் இன்னும் இருக்கின்றன. பலர் பலவாறு ஆராய்ந்து பயன் பெறுவார் ஆகுக.

முற்றிற்று

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1715
நன்கொடை எண்: 1715

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

புதுமலர் பிரஸ் லிமிடெட், கோவை.